0763.

சிவமயம்

# அருள் ஒளி


JAFFNA
2004/06/03
SRI LANKA.

தாய்லாந்[redacted]-பாங்கொங் அம்மன் கோயில்



தாய்லாந் சிக்மை மாநிலத்திலுள்ள சிவன் கோயில்

வைகாசி மாத இதழ்

ம
22

வெளியீடு
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை,
இலங்கை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தாய்லாந்தில் நடைபெற்ற ஆன்மிகத் தலைவர்களுக்கான
கருத்தரங்கில் பங்குகொண்ட இலங்கை மதப்பிரதிநிதிகள்.



தாய்லாந்தில் எயிட்ஸ் நோயளிகளின் காப்பகத்தில் நோயாளர்களுடன் மதத்தலைவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T|200|0763



உ

# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

*ஆசிரியர்:*
செஞ்சொற்செல்வர்
**திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்**

*உதவி ஆசிரியர்:*
**சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்**

2004 தாரண வருடம் வைகாசி மாதம்

*வெளியீடு:* ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை.

மலர் **22**

## எயிட்ஸ் (HIV/AIDS) நோயாளர்களுக்கு கருணை காட்டுமாறு ஆன்மீகத் தலைவர்களுக்கு வேண்டுகோள்

சென்ற மாதம் தாய்லாந்து நாட்டில் சிக்மை மாநிலத்தில் உலக சுகாதார நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஆன்மீகத் தலைவர்களுக்கான கருத்தரங்கு ஒருவாரம் இடம்பெற்றது. இக்கருத்தரங்கில் இலங்கையிலிருந்து ஒன்பது பௌத்த துறவிகளும் நான்கு கிறிஸ்தவ துறவிகளும் மூன்று இந்துமதப் பிரதிநிதிகளும் இரண்டு இஸ்லாமியப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த திரு. லோரன்ஸ் என்ற அறிஞரின் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பல பயனுள்ள விடயங்கள் ஆராயப்பட்டன. இன்று உலகையே அச்சுறுத்தும் எயிட்ஸ் நோயைப் பற்றி வெளியிடப்பட்ட தகவல்கள் நிகழ்வில் பங்குபற்றிய அனைவரையும் திடுக்கிட வைத்தது. இக்கருத்தரங்கு நடைபெற்ற தாய்லாந்தில் சுமார் இருபது இலட்சம் மக்கள் இதுவரை இந்நோயினால் பீடிக்கப்பட்டிருப்பது வேதனையோடு எடுத்துக்கூறப்பட்டது. மேலும் எயிட்ஸ் நோயாளர்களின் குழந்தைகள் இலட்சக்கணக்கில் வாழ்வில் நிர்க்கதியாகி அவலப்படும் நிலையினை பல்வேறு உதாரணங்களினூடாக மதத்தலைவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. கொடூரமான எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டு காப்பகங்களிலும், பௌத்த, கிறிஸ்தவ ஆச்சிரமங்களிலும் வாழும் நோயாளர்களை நேரில் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. நோயாளர்களில் சிலர் தம் வாழ்வில் தாம் விட்ட தவறுகளை தாமே எடுத்துரைத்து தமக்காகப் பிரார்த்திக்குமாறு ஆத்மீகத் தலைவர்களை மன்றாடியது நெஞ்சை நெகிழ வைத்தது. எக்குற்றமும் அறியாது தந்தை, தாய் வழியில் பிறப்பிலேயே எச். ஐ. வி. (H. I. V.) கிருமியைச் சம்பாதித்த ஆயிரக்கணக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளின் அவல வாழ்வினை ஆத்மீகத் தலைவர்கள் அறிய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எச். ஐ. வி. யினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் வாழும் இல்லங்களில் அவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் புகைப்படங்கள் ஒரு பக்கத்திலும் இதுவரை இறந்துபோன குழந்தைகளின் படங்களும் விபரங்களும் இருந்த காட்சி மதத்தலைவர்களைக் கண்ணீர் மல்க வைத்தது. மனித குலத்தை அச்சுறுத்தும் இக்கொடிய நோய்க்கு மருந்து இதுவரை விஞ்ஞான உலகால் கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே மெய்ஞ்ஞான உலகே இந்நோய் பரவாது காப்பதற்கு உதவுங்கள் எனக் கருத்தரங்கில் வேண்டுதல் செய்யப்பட்டது. அறிந்தும் அறியாமலும் இந்நோய்க்கு ஆட்பட்டுப் போனவர்களைக் கருணையோடு காப்பாற்ற முன்வாருங்கள். நோயாளிகளை வெறுக்காதீர்கள். நோயினால் நொந்துபோய் இருப்பவர்களுக்கு ஆறுதல் செய்வதே மனிதநேய மாண்பு. மதத்தலைவர்களே! உலகை சீரிய பாதையில் ஆற்றுப்படுத்தி, இந்நோய் பரவாது தடுக்க உங்கள் தயவினை உலக சுகாதார நிறுவனம் வேண்டி நிற்பதாக இக்கருத்தரங்கின் கருப்பொருள் அமைந்திருந்தது. எனவே இக்கொடிய துயரினைப் போக்க அனைவரும் ஒன்று பட்டு உழைத்தல் அத்தியாவசியமானது என்பதைத் தெரியப்படுத்துகிறோம்.

**- ஆசிரியர்**

## பாலறா வாயர்புகழ் பாடிமகிழ்வோம்



வைகாசி மூலம் வளமான திருநாள்
எந்நாளும் சைவம் பண்பாடும் பெருநாள்
உய்வார்கள் உய்ய வழிகாட்டும் உமையின்
திருஞானம் பாலை உண்டொளி செய்த
நிகரில்லா வண்ணம் தருஞானக் குழந்தை
நிறைசைவ மகிமை உலகெங்கும் பரவ
பொய்யராம் சமணர் புறங்கண்டு ஓட
புதுமைகள் பற்பலவும் செய்ஞானக் குழந்தை.

திருத்தோணி புரத்தில் ஞானப்பால் உண்டும்
திருக்கோலக் காவில் பொற்றாளம் பெற்றும்
திருநெல் வாயில்நல்ல சிவிகைகைக் கொண்டும்
திருமறைக் காட்டினில் திருக்கதவு அடைத்தும்
திருவீழி மிழலையில் படிக்காசு பெற்றும்
திருநீற்றின் மகிமை உலகெங்கும் விளங்க
வருஞானக் குழந்தை சிவன்பாதம் சேர்ந்த
வைகாசித் திங்கள் புகழ்பாடும் மனமே.

**கவியாக்கம்: சு. குகதேவன்**
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லவராக வாழ்ந்து பிறரையும் வாழ்விப்போம்

- கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்.

"நீ எதை நினைக்கிறாயோ, அதுவாகவே ஆகிறாய். நீ உன்னைப் பலவீனன் என்று நினைத்தால், பலவீனனாகவே நீ ஆகிவிடுவாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுவாய்," சுவாமி விவேகாநந்தர் அருளிய திருவாக்கு இதுவாகும். இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன் கூறப்பட்ட அருள்வாக்கு, இன்று விஞ்ஞான பூர்வமாக மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

"மனம் போல வாழ்வு" என்ற பண்டைத்தமிழ் வாசகமும் இதையே எடுத்தியம்புகிறது. மனம் சுத்தமாக இருந்தால், உலகமும் சுத்தமாகவே தெரியும். மனம் அழுக்காக இருந்தால் உலகமும் அழுக்கு நிறைந்ததாகவே தோன்றும். மஞ்சட்காமாலை உள்ள ஒருவனின் கண்களுக்கு பார்ப்பதெல்லாம் மஞ்சள் நிறமாகவே காட்சியளிக்கின்றன. அவனின் கண்களின் குற்றமல்ல, அது அவனைப்பீடித்த நோயின் தன்மை. வெளிப்பொருட்களில் காணப்படுகின்ற மஞ்சள் நிறம், உண்மையில் அப்பொருட்களுக்குரிய நிறமுமல்ல. அப்படியாயின், அந்த மஞ்சள் நிறம் எங்கிருக்கிறது எனின் மஞ்சட் காமாலைக்காரனின் கண்களில் தான் அந்த மஞ்சள் நிறமுள்ளது. இவ்வாறுதான் இருண்ட மனத்தினருக்கு உலகமெல்லாம் இருளாகவே தோற்றமளிக்கின்றது. நாம், எமது மனங்களைச் செவ்வையாகவும் ஒழுங்காகவும் வைத்திருக்கும் பட்சத்தில், உலகம் செவ்வையாகவும், ஒழுங்காகவும் எமக்குத் தோன்றும். உலகத்தை உற்று நோக்கி அங்குள்ள நெளிவு சுளிவுகளைக் கண்டுபிடிப்பதற்கு முன்னர், நாம் ஒருமுறை எம்மை உற்றுநோக்கி, உள்ளே சென்று எம்மிடமுள்ள குற்றங்குறைகளையும், கோணல் மாணல்களையும் கண்டு கொள்வது சாலச் சிறந்தது. அவ்வாறு குறைகளைக் கண்டுகொண்ட பின்னர், அவற்றை அகற்றி, நம்மை நாமே சீர்செய்து கொள்ள வேண்டும். அதைவிட்டு, நம்மிடம் குறைகளை வைத்துக் கொண்டு பிறரிடம் குறை காண்பதும், திருத்த முற்படுவதும் எத்துணை அறிவீனம் என்பதை உணர்ந்து கொள்ளுதல் அவசியம் ஆகும்.

"உன்னைத் திருத்திவிடு; உலகந் திருந்திவிடும்" என்று ஒரு பெரியார் கூறியுள்ளார். இது எத்துணை பொருள் பொதிந்த கூற்று என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஒரு பரந்த வெண்திரையில், ஒரு சிறிய கறுப்புப் புள்ளியை, ஓரிடத்தில் போட்டுவிட்டு, "இந்தத் திரையில் நீங்கள் காண்பது என்ன?" என்று ஒருவர் இன்னொருவரைப் பார்த்துக் கேட்டார். உடனே அவர், "திரையிலே ஒரு கறுப்புப் புள்ளியைக் காண்கிறேன்" என்று பதிலளித்தார். அந்தத் திரையில் பரந்து காணப்படுகின்ற வெண்மை, அவரின் கண்களுக்கு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. ஆனால் அதில், ஒரு சிறிய கறுப்புப் புள்ளி அவருக்குத் துலக்கமாகத் தெரிகிறது. இதுதான் மனிதனின் குழம்பிய மனநிலையைச் சுட்டிக் காட்டுகின்றது.

பொதுவாக, இன்று நம்மிடையே உள்ள மனப்போக்கு என்னவெனில், பிறரில் காணப்படுகின்ற குறைகளைத் தேடிக் கண்டு, வெளிப்படுத்த முயல்வதாகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே வேளை, பிறரில் உள்ள நல்ல குணங்களையும், நல்ல பண்புகளையும், காண்பதற்கும், பகிரங்கமாகப் பாராட்டுவதற்கும் பின்னிற்கின்றனர். உண்மையில் இவ்வுலகில் எவ்வளவோ நல்ல காரியங்கள் நடைபெறுகின்றன. ஆனால், அவற்றை அறிந்து, பலரின் மனங்கள் வெம்பி, வேதனை அடைகின்றனவே தவிர, அந்த நல்லவற்றை நல்லவையென ஏற்றுக்கொள்ளவோ, எடுத்துக் கூறவோ அவர்களின் மனங்கள் ஒப்புதல் வழங்குவதாக இல்லை. இது தகாத செயலாகும்.

ஒருவரின் நற்செயல்களையும், நற்பண்புகளையும், பகிரங்கமாகப் பலர் முன்னிலையில் பாராட்ட வேண்டும். ஆனால், ஒருவரின் குற்றங்குறைகளைக் காணின், சம்பந்தப்பட்ட அந்த மனிதரைத் தன்மையில் அழைத்து, பிறருக்குத் தெரியாமல், பக்குவமாக எடுத்துக்கூறித் திருந்தச் செய்வதே உத்தமனான செயல். ஒருவரைத் திருத்துவதிலும், அவராகத் திருந்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்குதலே மேலானது.

பிறரிலும், பிறவற்றிலும் எங்கேயாவது நல்லன ஏதாவது உண்டா, என்று தேடிப்பார்த்துக் காண்பதிலும், அவற்றை சுவைப்பதிலும் நாம் நம்மை ஈடுபடுத்திக் கொண்டால் அதனால் நமக்குத்தான் நன்மைகள் அதிகம் ஏற்படுகின்றன. நமது சொந்த நயத்திற்காவது, நன்மைகளையே தேடுவதாயும், நாடுவதாயும், புரிவதாயும் இருக்க வேண்டியுள்ளது. நம் எண்ணங்கள் போல, நாம் ஆகிவிடுகின்றோம் என்பது உளவியலாளரின் முடிவு. எனவே, நன்மையான எண்ணங்களையே சதா எங்கள் மனங்களில் உண்டாக்கிக் கொண்டிருந்தால் நாமும் நல்லவர்களாகி தொல்லைகள் அற்ற வாழ்க்கையை வாழமுடிகின்றது. சுவாமி விவேகாநந்தரும் ஒருவன் தான் நல்லவன் என்று நினைத்தால் நல்லவன் ஆகிவிடுகிறான். வல்லவன் என்று நினைத்தால் வல்லவன் ஆகிவிடுகிறான்; தான் பலவீனன் என்று நினைத்தால் பலவீனனாகவே வந்து விடுகிறான். என்கிறார். எனவே, நாம் பிறரில் நல்வற்றையே கண்டு, நல்லவற்றையே நம் மனங்களில் பதியச்செய்து, நல்லவர்களாகி நாமும் நல்வாழ்வு வாழ்ந்து பிறரையும் வாழ்விப்போமாக.

## நீதி வழங்கும்



குலவிளக்கின் அருள்ஒளியே
குங்குமத்து அழகியே
மலமறுத்து மங்கள
மருளு மன்னையே
துலாசாயா நீதிவளங்கும்
துர்க்காதேவி தாயே
வலம் வந்து வேண்டநின்னை
வரமருள்வாய் அம்மா

ஜெயகேமலதா
தொட்டிலடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சித்தன்கேணி
# ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத சிவசிதம்பரேஸ்வரர் ஆலயம்

**பிரம்மஸ்ரீ சபா. உமாபதிசர்மா (B. A.) அவர்கள்.**
சிவன்கோயில், சித்தன்கேணி.



இலங்கையின் வடபகுதியில் பிரசித்தி பெற்ற சிவ ஆலயங்கள் பல இருக்கின்றன. இவற்றுள் சித்தன்கேணியில் அமைந்திருக்கும் தனுவோடைப்பதி அருள்மிகு சிவகாமசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலயம் யாழ்ப்பாணத்தில் இருந்து எட்டு மைல் தொலைவில் அமைந்திருக்கின்றது.

சிவபூசையில் சிறந்து விளங்கிய சித்தர்கள் பலர் வாழ்ந்த கிராமம் சித்தன்கேணி ஆகும். சித்தர்கள் ஒரு மரநிழலின் கீழ் சிவலிங்கம் ஒன்றை வைத்து சிவபூசையை மேற்கொண்டு வந்தனர். சித்தர்களினால் ஆரம்பித்த இந்தச் சிவலிங்கமே இன்று பிரசித்தி பெற்ற சிவாலயமாக விளங்குகின்றது. அவர்கள் சிவலிங்கத்திற்கு சிவபூசையை நிறைவாகச் செய்வதற்காக இங்கு 3ம் திருவீதியில் திருக்கேணி ஒன்றையும் அமைத்தார்கள். சித்தர்கள் இக்கேணியை அமைத்ததினால் இக்கிராமம் சித்தன்கேணி என அழைக்கப்பட்டது. இக்கிராம மக்கள் அரவங்களினால் தீண்டப்படக்கூடாது என்பதற்காக சிவலிங்கத்தின் நிறைவான அருளால் சித்தர்கள் சித்தினைக்கொண்டு ஒரு விஷக்கல்லை இந்தக்கேணியில் ஸ்தாபித்தார்கள். இதனால் இன்றுவரை இக்கிராம மக்கள் எவரும் விஷக்கடியினால் பாதிக்கப்படாத அற்புதம் நிறைந்ததாக இவ்வூர் மிளிர்கின்றது.

தொன்மைமிக்க இவ்வாலயம் படிப்படியாக வளர்ச்சி அடைந்ததோடு நிறைவான பூசைக்கும் பல்வேறு வளர்ச்சிகளிற்கும் பிரம்மஸ்ரீ சபாபதி ஐயர் பாலசுப்பையர் அவர்கள் நிறைவான பங்களிப்பை நல்கினார். இடவசதி இன்றி இருந்த இவ்வாலயத்திற்கு 1857ம் ஆண்டு ஞானியர் என்ற கொடைவள்ளல் தனுவோடைப்பதி என்னும் காணியையும் பல வயல் நிலங்களையும் பனம் தோட்டங்களையும் காணிக்கையாக்கினார். தனு வோடைப்பதியின் மற்றுமொரு பகுதிக்காணியை பிரம்மஸ்ரீ பாலசுப்பையர் அவர்கள் சிவனிற்கு இரு வீதிகள் அமைக்கவும் பரிவார மூர்த்திகளும் அமைக்கும் அவாவினாலும் காணிக்கையாக்கினர். இவருடைய வம்சாவளியினர் இன்றும் இந்த ஆலயத்திற்கு பூசைகளை ஆற்றி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1890இல் சேர். பொன். இராமநாதனின் தந்தையார் பொன்னம்பலமுதலியார் காசியாத்திரை மேற்கொண்ட சமயத்தில் பிரசித்தி பெற்ற கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்திற்கு லிங்கங்கள் பலவற்றைக் கொண்டு வந்தார். இவர் கொண்டுவந்த லிங்கங்களில் சுயம்பு லிங்கத்தை ஞானியார் அவர்கள் பொன்னம்பல முதலியாரிடம் விரும்பிப்பெற்று மேற்படி ஆலயத்தை புதுப்பொலிவுடன் ஸ்தாபித்து கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடாத்தினார்கள்.

1906ம் ஆண்டு இரண்டாம் வீதியில் வசந்த மண்டபமும் 1908ம் ஆண்டு வைரக்கல்லினால் ஆலயம் கட்டப்பட்டு ஸ்தூபியும் அமைக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் இந்தியாவில் இருந்து பஞ்ச லிங்கங்கள், வான்மீகநாதர், ஜம்புகேஸ்வரர், திருக்காளத்தீஸ்வரர், அருணாசலேஸ்வரர், சிதம்பரேஸ்வரர், ஆகியனவும், சமயகுரவர்கள் நால்வரும், முருகன், மஹாவிஷ்ணு, இலட்சுமி, சரஸ்வதி, சூரியன், வைரவர், சண்டேஸ்வரர் என்பனவும் கொண்டு வரப்பட்டு தனித்தனி ஆலயங்களாக அமைக்கப்பட்டது.

1913ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆனி உத்தர தினத்தன்று நடராசருக்கு அபிஷேகம் நடைபெற்று தீர்த்தோற்சவம் நடைபெறுகின்றது. இவ்வாலயத்தில் பிரமாண்டமான கலை நுட்பங்களுடன் அமைந்த இராஜகோபுரமும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தில் மூன்று வீதிகள் இருப்பதும் சிறப்பான அம்சமாகும். வருடாந்த மகோற்சவத்தின் போதும் மார்கழித் திருவெம்பாவையின் போதும் பஞ்ச இரதங்களில் ஆனைமுகன் முதற்தேரிலும் நடராசர் இரண்டாவது தேரிலும் சிவகாமசுந்தரி மூன்றாவது தேரிலும் சுப்பிரமணியர் நான்காவது தேரிலும் மகோற்சவத்தின் போது ஐந்தாவது தேரில் சண்டேஸ்வரரும் திருவெம்பாவையின் போது மாணிக்கவாசகரும் பவனிவருவது கண்கொள்ளாக்காட்சியாகும். யாழ் குடாநாட்டிலுள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களுள் மூன்று வீதிகளில் பஞ்சரதங்களில் சுவாமிகள் பவனி வந்து அடியார்களிற்கு அருள்பாலிப்பது இக்கோயிலின் தனிச்சிறப்பாக அமைந்தது.

இந்த ஆலயத்தின் படிப்படியான வளர்ச்சிகளுக்கு தேவஸ்தான ஸ்தாபக குருமாரும் பரிபாலன சபையினரும் முன்னின்று உழைத்து வருகின்றனர். மஹா சங்காபிஷேகமும் திருக்கல்யாணமும் ஆனி பௌர்ணமி அன்றும் ருதுசாந்தி வைபவம் ஆடிப்பூரத்தில் அன்றும் மற்றும் சிவராத்திரி விழா, சோமவாரம், பிரதோஷம், கேதாரகௌரி விரதம், தீபபூசை, ஆகியனவும் சிறப்பாக நடைபெறுகின்றது.

யாழ் குடாநாட்டில் உள்ள சிவாலயங்களில் பழமையும் பெருமையும் வாய்ந்த சிவாலயம் சித்தன்கேணி தனுவோடைப்பதி அருள்மிகு சிவகாமசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயமாகும்.

**சுபம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவாலயங்களில் நடராசர் பூசை

★ உச்சிக் காலத்திற்குப் பின்னர் பகல் நான்காம் யாமத்தில் ஆசாரியர் பரிஜனங்களுடன் நடராஜருடைய சன்னிதிக்குச் சென்று கிழக்கு முகமாக இருந்து அங்கசுத்தி அர்க்யம் பாத்தியம் ஆசமனம் என்னும் இவற்றைச் செய்து கொண்டு அஸ்திரமந்திரத்தை உச்சரித்து வாயிலைப் புரோக்ஷித்து துவாரபூஜை முதலியன செய்து திரையை நீக்கி கர்ப்பக்கிருகத்திற்குச் சென்று சர்ப்பாவரணத்தைப் பூசித்து பிம்பத்தை அஸ்திரமந்திரத்தால் புரோக்ஷித்து ஆசனத்தைப் பூசிக்க வேண்டும். ஆசனத்தைப் பூசிக்குமுறை "காமிக ஆகமத்தில்" கூறப்பட்டிருக்கின்றது. அது வருமாறு:

"சகளபூஜை செய்யும்போது ஆசனத்தைப் பூசிக்கவேண்டும். பாதாளம் முதற்கொண்டு கூர்மாஸன மீறாக மூலாதாரத்தை பாவிக்கவேண்டும். முதலாவது அனந்தாஸனத்தையும், இரண்டாவது சிம்மாசனத்தையும், மூன்றாவது யோகாசனத்தையும், நான்காவது பத்மாசனத்தையும், ஐந்தாவது விமலாசனத்தையும் இவ்வாறு ஐந்து ஆசனங்களையும் பூஜை செய்யவேண்டும். ஆவாஹனம் செய்யும் பொழுது பத்மாசனத்தையும், அபிஷேகம் செய்யும் போது அனந்தாஸனத்தையும், அருச்சனாகாலத்தில் விமலாசனத்தையும், நைவேத்யம் சமர்ப்பிக்கும்பொழுது யோகாசனத்தையும், ஸ்தோத்திரம், கீதம், நிருத்தம் இவை நிகழுங் காலத்து சிம்மாசனத்தையும் பூசிக்கவேண்டும்" என்பதாம்.

---

★ உத்தரகாரணத்திற் கூறியபடி "பிரதோஷகாலத்தில்" மேற்கண்டவாறு முதலாவது நடேசபூசை செய்து பின்னர் மூலலிங்கம் மகேசுவரர் முதலியவர் கௌரீ இவர்கட்கு நைவேத்தியம் தூபதீபங்கள் சமர்ப்பித்து இவ்வாறு உபசாரங்களைச் செய்ய வேண்டும்.

பூர்வகாரணம் அர்ச்சநாங்கவிதிப்படலம் 17-18வது சுலோகங்களில் உச்சிக்கால முதல் பதினைந்து நாழிகை வரையில் சாயங்காலம் எனவும், சூரியாஸ்தமனத்திற்குப் பின் ஏழரை நாழிகை வரை பிரதோஷ காலமெனவும் கூறப்பட்டுள்ளன. உத்தரகாரணம் உஷக்கால பூஜாவிதிப்பட்லம் 40-41வது சுலோகங்களில் சாயங்கால பூஜைக்கு முன்னர் நடேசருக்குப் பூஜையும், மூலலிங்கத்திற்கும் பரிவாரத்திற்கும் அம்பிகைக்கும் நைவேத்திய தூப தீப உபசாரங்களும் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு செய்யப்படும் பூசையின் காலப்பெயர் கூறப்படவில்லை. 40-வது பக்கம் இப்பணியில் உள்ள ஆறுகால நிர்ணயத்தில் சாயங்காலத்திற்கு முன்னர்கூறப்பட்ட பிரதோஷ காலமே இதுவெனக்கொள்ளக் கிடக்கின்றது. சில தலங்களில் சாயங்காலத்திற்கு முன்னர் நடராஜாவுக்கு பூஜை செய்யும் வழக்கமும் காணப்படுகிறது. ஆகையால் இங்கே கூறப்பட்ட பிரதோஷகாலபூஜாவிதி உத்தரகாரணத்தை அனுசரித்து, பூர்வகாரணத்திற் கூறப்பட்ட பிரதோஷகால பூஜை இரண்டாங்காலமென வழங்கி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த முறைப்படி ஆவாஹனத்திற்காகப் பத்மாசனத்தை அருச்சித்து, மூல மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு ஆவாஹனம் செய்து, தண்ட பங்கீக்கிரமமாக பஞ்சப்பிரம்ம மந்திரங்களையும் அங்க மந்திரங்களையும் நியாசஞ் செய்து, வர்ண நியாசம், கலாநியாசங்களையும் செய்து, பின்னர் ஸ்தாபனம், அமிருதீகரணம் ஈறான பஞ்ச முத்திரைகளையும் சமர்ப்பித்து தூபம், தீபம், அருக்யங்கள் சமர்ப்பித்து, நடேசருடைய இடது பக்கத்தில் சக்தி மூல மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு தேவிக்கு ஆவாஹனம் முதலியவற்றால் உபசாரம் செய்யவேண்டும்.

பின்னர் நடராஜருடைய சன்னிதியில் பிரதிலிங்க பூசை செய்வதற்காக அபிஷேகபீடத்தைத் தாபித்து, அதன்மேல் சிம்மாசனத்தை அருச்சித்து அதற்கு வலப்பக்கத்தில் பிரதிலிங்க சம்புடத்தைத் தாபித்து, அஸ்திரமந்திரத்தை உச்சரித்துப் புரோஷித்து சம்புடத்தின் மூடியைத் திறந்து வாயிலில் துவாரபூஜை செய்து தூபம், தீபம், அருக்கியங்கள் சமர்ப்பித்து லிங்கத்தையெடுத்து மூல மந்திரத்தை உச்சரித்துக் கொண்டுஅபிஷேக பீடத்தில் வீற்றிருக்கச்செய்து லிங்கத்திற்கு ஆஸனத்தைப் பூசித்து ஆவாஹனம் செய்து பஞ்சப் பிரமமந்திரங்களையும் அங்க மந்திரங்களையும் முண்டபங்கீக்ரமமாக நியாசஞ் செய்து, ஸ்தாபனம் முதலிய ஐந்து முத்திரைகளையும் காணபித்து இவ்வாறு எல்லாவுபசாரங்களையும் செய்த பின்னர் நடராஜரைச் சத்தியுடன் அநந்தாசனத்தால் பூசித்து மூலமந்திரத்தை உச்சரித்துக் கொண்டு அருக்யஜலத்தால் மூன்று முறை அபிஷேகம் செய்ததாகப் புரோஷித்து பின்னர் பிரதிலிங்கத்தை அபிஷேகஞ் செய்து திருவொற்றாடை சாத்தி, வஸ்திரம், சந்தனம், மாலை முதலியவற்றால் அலங்கரித்து நடராஜ பிம்பத்தையும் திருவொற்றாடை சாத்துதல் வஸ்திரமணிதல் முதலியவற்றால் அலங்கரிக்கவேண்டும்.

பின்னர், நைவேத்யம் சமர்ப்பித்தற் பொருட்டு யோகாசனத்தைப் பூசித்து இருவருக்கும் சுத்தான்னத்தை நிவேதனஞ் செய்து பிரதிலிங்கத்திற்கு விமலாசன பூசை செய்யவேண்டும். பின்னர், நடராஜாவிற்குப் பத்மாசன பூசை செய்து ஆசனமூர்த்தி மூலமந்திரங்களால் நடேசுவரரை அருச்சித்து இருதயத்தில் காயத்ரியை அபிமந்திரணஞ் செய்து தியானம் செய்யவேண்டும். தியானம் வருமாறு:

**ஒரு முகமும், நான்கு கைகளும், மூன்று கண்களும், இடது கைகளில் ஊமத்தம் பூவும், அக்கினியும் ஆகிய இவற்றையுடையவராயும், சந்திரனையும் வளைந்து உயரேதூக்கிய ஒரு காலையுமுடையவராயும், வலது கைகளில் டமருகம், அபயம் என்னும் இவற்றையுடையவராயும், ஸ்வஸ்தீகம், குண்டலம், கங்கை என்னுமிவற்றையுடையவராயும், விரிந்த ஜடையையுடையவராயும், அபஸ்மாரன் (முயலகன்) மேல் நிற்பவராயுமுள்ள நடராஜரை வணங்குகிறேன்** என்பதாகும்.

இவ்வாறு தியானித்து அருச்சித்து அவருக்கு இடது பக்கத்தில் ஓம் ஹ்ரீம் சிவகாம்யம்பிகாஸனாய நம:, ஓம் ஹ்ரீம் சிவகாம்யம்பிகா மூர்த்தயே நம: என்று ஆஸனமூர்த்தி மந்திரங்களால் அம்பிகையை பூசித்துத் தியானம் செய்யவேண்டும். தியானம் வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நடராஜருடைய சக்தியாயும், இரண்டு கைகளை உடையவளாயும், ஒரு கையைத் தொங்கவிட்டிருப்பவளாயும், மற்றொரு கையில் நீலோத்பலத்தை வைத்திருப்பவளாயும், கருமை நிறமுடையவளாயும், இரண்டு கண்களையும், அழகான ஒரு முகத்தையும் உடையவளாயும், பருத்த ஸ்தனங்களை உடையவளாயும், பலவித ஆபரணங்களை அணிந்திருப்பவளாயும், சொர்ணத்தாலும் இரத்னத்தாலும் செய்யப்பட்ட கிரீடத்தைத் தரித்திருப்பவளாயும், கேசபாசத்தை உடையவளாயும், தாண்டவமூர்த்தியுடன் கூடியிருப்பவளாயும், பத்மத்தில் இருப்பவளாயும் உள்ள கௌரியைத் தியானிக்கிறேன்" என்பதாம்.

இவ்வாறு இருவரையும் தியானித்து, மூல மந்திரத்தால் ஆவாஹனம் செய்து, ஐந்து பீஜாக்கரங்களுடன், சிருஷ்டி, முதலிய பஞ்ச கிருத்தியங்களையுடைய பஞ்சாஷரத்தை நடேசருடைய அவ்வந்த ஸ்தானங்களில் நியாசஞ்செய்து, பஞ்சப்பிரமஷடங்க மந்திரங்களால் நடேசரை அருச்சித்து, அஸ்திரமந்திரத்தை உச்சரித்து கிருஷ்ணகந்தத்தை (சாந்தை) இட்டு, சக்தியின் நெற்றியிலும் தரித்து, பிரதிலிங்கத்திற்குப் பஞ்சாவரண ஸ்தானங்களில் பஞ்சாவரண தேவதைகளைப் பூசித்து, நடராஜ பிம்பத்தினிடத்து லிங்கமூர்த்தியைக் காண்பித்து பேடகத்தில் லிங்கத்தைத் தாபித்து, இருப்பிடத்தில் வைக்க வேண்டும்.

பின்னர் நடராஜ மூர்த்திக்குக் கிழக்கு முகம் முதற்கொண்டு பஞ்சாவரண முறையாகப் பஞ்சாவரணத்தை அருச்சித்து, பிரணவத்தை உச்சரித்துப் பிரபையை அருச்சித்து ஜ்வாலையில் அக்கரங்களை அருச்சித்து, தேவியையும், கௌரியைப் போல் பூசை செய்து, நைவேத்தியம் சமர்ப்பிக்கும் பொருட்டு முன்போல் யோகாசனத்தைப் பூசித்து, அப்பம் முதலியவற்றுடன் நைவேத்தியத்தையும் தூபம், தீபம் அருக்யங்களையுஞ் சமர்ப்பிக்கவேண்டும்.

பின்னர், பாதசாஸ்திரத்தில் கூறியவாறு தாளம், மத்தளம், வாத்தியம் என்னும் இவற்றால் நடேசரைச் சந்தோஷிக்கச் செய்து, தாளத்தின் முடிவில் நடராஜருக்கும், அம்பிகைக்கும் தனித்தனி நைவேத்திய உபசாரத்தைச் சமர்ப்பித்து, மீண்டும் சிம்மாசனத்தைப் பூசித்து, கிழக்கு முதலிய எட்டுத் திக்குகளில் பஞ்சப்பிரம மந்திரம் அங்க மந்திரங்களுடன் அஷ்டபைரவரை அருச்சித்து நடராஜருடைய இரு பக்கங்களில் பதஞ்சலி வியாக்ரபாதர்களைப் பூசித்துக் காலில் அபஸ்மாரன் என்னும் அசுரனைப் பூசித்து ஜடையில் கங்கை, சந்திரன் என்னும் இவர்களைப் பூசித்து, உக்ரம் சாந்தியாகும் நிமித்தம் அலங்கார பாத்திரத்தில் கொழுக்கட்டை, வடை என்னும் இவற்றையும் தாம்பூலங்களையும் வைத்துக் கொண்டு நைவேத்தியம், தூபம், தீபம், அர்க்யம் ஆகிய உபசாரங்களைச் செய்யவேண்டும்.

பின்னர், மூலலிங்கம், மகேசுவரர் முதலிய மூர்த்தங்கள் அம்பாள் ஆகிய இவர்களுக்கு நைவேத்தியம், தூபம், தீபம் முதலியன சமர்ப்பித்து எல்லாவுபசாரங்களையும் செய்யவேண்டும்.

**நன்றி - திருவாவடுதுறை ஆதீன வெளியீடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் விருந்து

# கொடியேற்றக் கொடிகட்டியவர்

சகோதரி யதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே! உங்கள் அனைவருக்கும் அன்பான புத்தாண்டு வாழ்த்துக்கள். புது வருடம் பிறந்து விட்டது நாட்டிலே நல்ல ஆட்சி, சாந்தி, சமாதானம், நிலவ பிரார்த்தித்துக் கொள்ளுவோம்.

பெற்றான் சாம்பான் என்பவனுக்கு முத்தி கொடுத்த உமாபதி சிவாச்சாரியார் பற்றி முன்பு வாசித்தீர்கள் அல்லவா! அவருக்கு மதிப்புச் செலுத்த தில்லைவாழ் அந்தணர்கள் விரும்பவில்லை. அவரை ஒரு செப்படி வித்தைக்காரன் என்று ஒதுக்கியே வைத்தார்கள். சிதம்பரத்திற்குள்ளே வரவிடவில்லை. உமாபதிசிவத்தாரும் கொற்றவன் குடி என்ற இடத்தில் இருந்து கொண்டு சிவபூசை செய்து சாஸ்திர நூல்களைப் படித்து சைவ சித்தாந்த கருத்துக்களை சிந்தித்து எழுதிக் கொண்டிருந்தார்.

அவருடைய தினசரி பூஜைக்குரிய சிவலிங்கத்தை பூஜை முடிந்ததும் அதற்குரிய சிறிய பெட்டகத்தில் வைப்பது வழக்கம். இப்படி இருக்கும் நாட்களில் சிதம்பரம் கோயிலின் மகோற்சவ காலம் வந்தது. உமாபதிசிவத்தைத் தவிர்ந்த எல்லா அந்தணர்களும் கூடி உற்சவத்திற்கான ஆயத்தங்களை முறைப்படி செய்தார்கள். கொடியேற்றத்தினம் வந்தது. கொடி மரத்துப் பூஜை எல்லாம் நிறைவேறி கொடியேற்றத் தொடங்கினார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ கொடிக்கயிறு செயலற்று கொடி மேலேறாமல் கீழேயே இருந்தது. அந்தணர்கள் கலங்கினார்கள். பலமுறை சிவபெருமானை வணங்கினார்கள். பிராயச்சித்தம் செய்தார்கள். என்ன முயன்றும் கொடியேறவில்லை. எல்லோரும் திகைத்து நின்றார்கள். இந்த நிலையில் சிதம்பர நடராஜப் பெருமானின் சிற்சபையில் மேலே இருந்து ஒரு அசரீரி கேட்டது.

"நாம் தற்போது இங்கு இல்லை. உமாபதி சிவத்தினுடைய பூஜைப்பெட்டகத்துள் இருக்கிறோம். உமாபதி இங்கே வந்தால் நாமும் வருவோம். கொடியும் ஏறும்"

இந்த தெய்வ வாக்கைக் கேட்டு தில்லைவாழ் அந்தணரும் சிதம்பரத்து மக்களும் வியப்பும் அச்சமும் அடைந்தார்கள். மக்களை முன்னிட்டுக் கொண்டு அந்தணர்கள் கொற்றவன் குடி ஓடினர். உமாபதி சிவாச்சாரியாரை பணிந்து வணங்கினர். நடந்த அற்புத நிகழ்ச்சியைச் சொல்லி அவரிடம் மன்னிப்பை வேண்டினர்.

"சுவாமி எங்கள் அறியாமையை மன்னித்து வந்து கொடியேற்றி அருள் புரியவேண்டும்" என்று வேண்டினார்கள். உமாபதியார் இறைவனுடைய கருணையை எண்ணி எண்ணி அழுதார். கொடிக்கவி என்ற நாலு பாடல்களை உள்ளமுருகப் பாடினார். சிதம்பரத்தில் கொடி ஏறியது.

சிவபெருமான் சாதி, சமயம், கடந்தவர். அன்பே வடிவானவர். ஏழைகளின் உறவினர் என்பதை இந்த நிகழ்ச்சி உலகத்திற்கு எடுத்துக் காட்டியதை அறிகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிக்கவி

(மகோற்சவ காலங்களில் கொடியேற்ற விழாவின் போது பாடுவது)

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் ஒன்று மேவிடில் ஒன்று
ஒளிக்கும் எனினும் இருள் அடராது உள்ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துளதேனும் திரிமலத்தே
குளிக்கும் உயிர்அருள் கூடும்படிக் கொடி கட்டினனே. 1.

பொருளாம் பொருளேது போதேது கண்ணேது
இருளாம் வெளியேது இரவேது அருளாளா நீ
புரவா வையமெல்லாம் நீ அறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி. 2.

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்காது உணர்வரிய தன்மையனை – நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள்நல்கக் கொடி. 3.

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் – நெஞ்சழுத்திலே
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி. 4.

**- உமாபதிசிவாச்சாரியார்**

## குங்குமத்தால்

**தேடிய யின்பம்யாவும் திருவோணத்**
**திகழொளியாள் அருளன்றோ–நான்**
**பாடிய பாடல்யாவும் அவளருளின்**
**பயனன்றோ–தாயவளின்**
**சூடிய குங்குமத்தால் குறைகள்**
**நீங்கி குதூகலம் பிறக்குமன்றோ**
**நாடிய யனைவர்க்கும் நல மருளும்**
**நல்லாள் அன்னை ஸ்ரீ துர்க்கா.**



**இராமஜெயபாலன்**
கொக்குவில்

# இந்து மக்களின் ஆன்மீக வைராக்கியம்
## இதிகாச வரலாறு

**பண்டிதர் இ. வடிவேல் அவர்கள்**
திருகோணமலை.

மன்னன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்று வாழ்ந்த காலகட்டத்தில் மதுரை மாவட்டத்தில் குறுநில மன்னர்களாய் வாழ்ந்த மருது பாண்டியர் என்று சொல்லப்படும் சின்னமருது பெரியமருது என்னும் மாவீரர்கள் சிவபெருமான் மீது கொண்ட பக்தி வைராக்கியத்தினால் காளையார் கோவிலைக்கட்டி தமக்கும் மக்களுக்கும் குலதெய்வமான சிவபெருமானுக்கு மருதப்பசுவாமி என்று பெயரிட்டு வழிபட்டு வாழ்ந்தார்கள்.

இவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சிவகங்கைச் சீமையை கி. பி. 1780 முதல் 1801 வரை சிறப்பாக ஆண்டவர்கள். ஆங்கில ஏகாதிபத்தியம் கி. பி. 1801ல் கருநாடகத்தில் சட்டப்படி காலூன்றிய போது அதனை எதிர்த்தவர்கள் மருதுபாண்டியர்.

இவர்களுடைய தந்தையார் முத்து விஜயரகுநாதரின் படைத்தளபதியாய் இருந்தவர். முத்து விஜயரகுநாதர் சிவகங்கைச் சீமையை ஆண்டமன்னன். தங்கள் தந்தையார் வழிநின்று சின்னமருது பெரியமருது ஆகிய புகழ்பெற்ற மருதுபாண்டியர்கள் மன்னனின் சேனைத் தளபதியாக இருந்தவர்கள்.

கி. பி. 1772ல் இராமநாதபுரம் சிவகங்கைச் சீமையின்மீது பிரித்தானிய படைத்தளபதி கேணல் சிமித்தின் படையெடுப்பு நிகழ்ந்தது. இதனை எதிர்த்து சிவகங்கை மன்னர் முத்து விஜயரகுநாதர் வீரப்போர் புரிந்து உயிர் துறந்தார். படைத்தளபதியும் உயிர் துறக்கவே, அவருடைய வீரமனைவி வேலு நாச்சியாருக்கு படைத்தளபதியின் புத்திரர்கள் மருது பாண்டியர் இருவரும் துணையாக நின்றார்கள். இருவரும் படைத்தளபதி யானார்கள். இவர்கள் சிவபக்தர்கள். தமது மதி நுட்பத்தால் நாட்டைக் காப்பாற்றிய மருது பாண்டியர்கள் மன்னன் எழுப்பிய காளையர் கோவிலுக்குக் கோபுரம் கட்டியவர்கள் இவர்களே. காளையர் கோவிற் திருப்பணியோடு, குன்றக்குடி திருமோகூர் முதலிய இடங்களிலும் சிவன் கோவிலை கட்டியவர்கள்.

கி. பி. 1783ஆம் ஆண்டிலும் கி. பி. 1789ஆம் ஆண்டிலும் ஆங்கில ஏகாதிபத்தியப் படைகள் சிவகங்கைச் சீமைமீது மீண்டும் படையெடுத்தனர். பாஞ்சாலங் குறிச்சி வெள்ளையர்கள் கையில் சிக்கிய ஐந்து நாட்களிலேயே சிவகங்கைச் சீமையில் விடுதலைப் போராட்டம் வீறுகொண்டெழுந்தது.

ஆங்கிலேயத் தளபதி கேணல் புல்லரின் படையெடுப்பை 150 நாட்கள் மருது பாண்டியர் எனப்படும் சின்னமருது பெரியமருது இருவரும் எதிர்த்துப் போராடினர். கேணல் புல்லரினால் இவர்களைப் பிடிக்க முடியவில்லை. புல்லர் பின்வாங்கிச் சென்று சதித்திட்டம் தீட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்துக்கு அடிமைப்பட்ட எட்டப்பன் ஒருவன் ஆங்கிலத் தளபதியை அணுகி, மருதுபாண்டியரைப் பிடிக்க வழிகூறினான். மருது பாண்டியரின் உயிர்போன்றது காளையர் கோயில். கோயிற் கோபுரத்தையும் கோயிலையும் இடித்தழிக்கப் போவதாக அம்பலப்படுத்தினால் மருது பாண்டிர்கள் மறைந்திருக்கும் இடத்திலிருந்து வெளியே வருவார்கள் என்பது எட்டப்பன் காட்டிய வழி.

சின்னமருது மாபெரும் வீரன். பெரியமருது தம்பியின் மீது உயிரையே வைத்திருப்பவன். இருவருடைய உயிர்போன்றது காளையார் கோவில் என்பதை அறிந்த படைத்தளபதி கேணல் புல்லர் மறுநாளே கோவிலுக்கு முன்பாக பீரங்கிகளைச் சுற்றி வளைத்து நிறுத்திவிட்டு கோவிலை இடிக்கப்போவதாகப் பிரகடனப்படுத்தினான்.

காளையார் கோவிலைக் காப்பாற்ற வேண்டும். நமது குலதெய்வமாகிய மருதவாணர் ஆலயக் கருவறையில் அமர்ந்து நாட்டையும் நம்மையும் மக்களையும் காப்பாற்றி வந்தவர். எந்தக் கண்களால் சிவபெருமானாகிய மருதவாணரைத் தரிசித்தோமோ அந்தக் கண்களால் பெருமானுடைய திருவுருவமும் திருக்கோவிலும் கோபுரமும் அழிக்கப்படுவதைக் காணும் அபாக்கியர்களாக வாழ்வதை விட இறப்பதே மேல் என்று உறுதிபூண்டார்கள்.

ஐம்பொறிகளும், புலன்களும் கரணங்களும் இறைவனிடம் ஒடுங்கிய நிலையில் படைக்கலன்களை உதறிவிட்டு ஆங்கிலப்படைத் தளபதி கேணல் புல்லரிடம் சரணாகதியடைந்தார்கள் மருதபாண்டியர்கள்.

பெரியமருது பேசினான் கோவிலையும் கோபுரத்தையும் அழிக்க வேண்டாம். எங்களைக் கொன்று விடுங்கள். வீரத்தையும் படைக்கலங்களையும் களத்தே போட்டுவிட்டு வெறுங்கையோடு நின்ற மாவீரன் சின்னமருது கோபுரத்தையும் கோவிலையும் மருதவாணரையும் தனது அகக் கண்களினாற் கண்டு கண்டு நினைந்து நினைந்து மௌனியாகிவிட்டான்.

அப்போது கேணல் புல்லர் பிரித்தானிய மன்னரின் ஆணைப்படி உங்களுக்கு மரணதண்டனை விதிக்கிறேன். கி. பி. 1801ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ஆம் நாள் இருவரும் தூக்கிலிடப்பட்டனர். தூக்குத் தண்டனை விதித்த படைத்தளபதி உங்களுடைய கடைசி விருப்பம் எதுவோ அதைக் கேளுங்கள் நிறைவேற்றி வைக்கிறேன் என்றான்.

மருது பாண்டியர் தங்கள் நாட்டை நினைக்கவில்லை, தங்கள் பரம்பரையை நினைக்கவில்லை, தங்களது வீரம் செல்வம் செல்வாக்குகளை நினைக்கவில்லை இவற்றையெல்லாம் தருகின்ற மருதவாணராகிய சிவபெருமானை மாத்திரம் நினைத்தார்கள். தங்கள் கண்களால் கண்டு அனுபவித்த இறைவனுடைய திருமேனியையும் திருக்கோவிலையும் திருக்கோபுரத்தையும் நினைத்தார்கள். அதனால் ஆங்கிலப் படைத்தளபதியிடம் தங்கள் கடைசி விருப்பத்தைக் கேட்டார்கள்.

"எங்களைத் தூக்கிலிட்டபின் எங்களைப் புதைக்கும் போது மருதவாணராகிய சிவபெருமானைப் பார்த்துக்கொண்டே இருக்கும்படி கோவிலுக்கு முன்பக்கம் புதைத்துவிடுங்கள்" என்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி காளையார் கோவிலுக்கு எதிரே சற்றுத் தூரத்தில் தூக்கிலிடப்பட்டு அந்த இடத்திலே உடலைப் புதைக்கும் போது அவர்களுடைய தலைகளை வெட்டி எடுத்துவந்து காளையார் கோவிலுக்கு முன்பாக அவர்களுடைய கண்கள் மருதவாணரைப் பார்த்தபடி இருக்கப் புதைத்தார்கள்.

இப்போது அந்த இடத்தில் அவர்களுடைய இரண்டு சமாதிகளும் இருக்கின்றன. அவர்கள் கட்டிய கோயில்களில் அவர்களுடைய உருவப் படிமங்கள் காணப்படுகின்றன.

இந்த வரலாறு இந்துக்களாகிய நாம் நமது ஆலயங்களைப் பேணி முறையாகப் பாதுகாக்க வேண்டும் என்பதையும் அதன் மூலம் நமது ஆன்மீக வாழ்வைப் புனிதமான சிவநெறியில் இணைத்து வைராக்கிய பக்தியோடு வாழவேண்டும் என்பதையும் உணர்த்துகின்றது.

மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நிகழ்ந்த உண்மைச் சம்பவமொன்று இந்துக்களின் வைராக்கிய பக்தியை நினைவுறுத்துகின்றது.

**தியாக வரலாறு:**

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மையை விளக்குவது சைவ சித்தாந்தம். பதியாகிய முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்பதை "யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்" என்பதை முடிந்த முடிபாகக் கொண்டனர் சான்றோர். மக்களுடைய வாழ்க்கையோடு இணைந்த நெறி சிவநெறி. எனினும் பிறநெறிகளும் இந்துக்களுடைய வாழ்க்கையில் இயற்கையோடொட்டி இயல்பாக அமைந்திருப்பதை உணர்ந்த ஆதி சங்கராச்சாரியார் அவர்கள் சமய நெறிகளை அறுவகை நெறிகளாகக் கண்டார். அவை சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன.

எந்த நெறியில் வாழ்ந்தாலும் இந்துக்களின் ஆன்மீக உணர்வை ஸ்திரப்படுத்தவும் மேம்படுத்தவும் ஆலயங்கள் களமாக அமைவது போல ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்படும் மூல மூர்த்திகளும் முக்கியமானவை என்ற இறை நம்பிக்கையோடு இந்துக்கள் வாழ்ந்தார்கள். வாழ்ந்து வருகிறார்கள். அதற்காக இந்துக்கள் தமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் தியாகம்பண்ணி வாழ்கிறார்கள்.

பரப்பிரம்மத்தின் அடங்காற்றலையும் இயங்காற்றலையும் விளக்கும் அர்த்தநாரீஸ்வர தத்துவத்தை அருவாயும் உருவாயும் அருவுருவாயும் சிவலிங்கத் திருமேனியில் ஞானக்கண்களாற் கண்ட மெய்ஞானிகள் ஆலயங்களின் கருவறையில் சிவலிங்கப் பெருமானைப் பிரதிஷ்டை செய்து வழிபட மக்களை நெறிப்படுத்தினார்கள். அதற்காக ஆகமங்களையும் சாஸ்திரங்களையும் தோத்திரங்களையும் படைத்துப் பக்தி வைராக்கியத்தைப் பலப்படுத்தினார்கள்.

இலிங்க வழிபாடு சிறப்பாக நிகழும் சில தலங்களை நினைவுகூருவோம். அவைகளில் பன்னிரண்டு ஜோதி லிங்கங்கள் பிரசித்தமானவை. சௌராஷ்டிதத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமநாதலிங்கம் ஸ்ரீசைலத்தில் மல்லிகார்ச்சனலிங்கம் உஜ்ஜியினில் மகாலிங்கம் (ஓங்காரலிங்கம்) ஹிமவத்திரியில் கேதாரலிங்கம், குடக்சானில் பீமசங்காரலிங்கம், வாரணாசியில் விஸ்வேஸ்வரலிங்கம், கோதாவரிதீரத்தில் திரியம்பகலிங்கம், சிதாபுரத்தில் வைத்தியநாதலிங்கம், தாருகாவனத்தில் நாகேஸ்வரலிங்கம், சேதுவில் இராமேஸ்வர லிங்கம்.

உத்தர கயிலையாகிய இமயமலை இயல்பாகவே சிவலிங்க வடிவில் அமைந்திருக்கின்றது. தெட்சண கயிலையாகிய திருக்கோணேஸ்வரத்தில் கோணலிங்கம், காசி விஸ்வநாதர் கோயிற் கருவறையில் சிவலிங்கம், திருக்கேதீஸ்வரக் கோயிற் கருவறையில் கேதீஸ்வரலிங்கம், தில்லைக்கூத்தன் ஆலயத்தில் சிவலிங்கம், ஈழத்துச் சிதம்பரத்தில் சிவலிங்கம் சீர்காளியில், திருநெல்வேலியில் திரிசிராமலையில் இன்னும் பல தலங்களிலும் கருவறையில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது.

ஈழத்தில் நகுலேஸ்வரம், தான்தோன்றீஸ்வரம், முனீஸ்வரம் முதலிய இடங்களிலும், சில இடங்களில் பிள்ளையார் கோவில் முருகன் கோவில், சக்தி பீடங்களிலும் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

இந்தச் சிவலிங்க பக்தி வைராக்கிய நிகழ்ச்சி ஒன்று மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் இருந்து நிகழ்ந்த தியாக வரலாறு பலரும் அறியாத பாங்கில் இருந்து வருகின்றது.

பாரத நாட்டில் வடநாட்டு மன்னர்களும் தென்னாட்டு மன்னர்களும் ஒருவர்மீது ஒருவர் மாறிமாறிப் படையெடுத்துத் தத்தமது செல்வாக்கைப் பலப்படுத்திக் கொண்டது போலவும் பிறநாட்டவர்களாகிய போத்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் எனப்படுவோர் கிழக்காசிய நாடுகளான இந்தியாவிற்கும் ஈழத்திற்கும் இலக்குவைத்துப் படையெடுத்து நாடுபிடித்து ஆண்டது போலவும், மொகலாயர்களும் ஒரு காலத்தில் இந்தியா மீது படையெடுத்து இஸ்லாமியத்தை இந்துக்கள் மீது திணிக்கவும் முற்பட்டார்கள்.

இந்தியாவில் மன்னர் ஆட்சி நடைபெற்று நாடு பிளவுபட்டு நலிவுற்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திப் பிறநாட்டவர்கள் இந்தியாவைக் கைப்பற்றியதுபோல மொகலாயர்களும் தென் இந்திய இந்துக் கோவில்களின் செல்வாக்கிலும் செல்வத்திலும் குறிவைத்துப் படையெடுத்தார்கள். அவ்வாறு படையெடுத்த போது மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கும் குறி வைத்தார்கள்.

அவ்வாறு படையெடுத்த மொகலாயப் பெரும்படை மதுரையை நோக்கி வந்துகொண்டிருப்பதை அறிந்து இந்துமக்கள் ஆங்காங்கே எதிர்த்துப் போராடியபோதும் மதவைராக்கியங் கொண்ட இஸ்லாமியப் பெரும்படை மதுரை மீனாட்சி அம்மன் கோவிலை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில் தமது உள்ளங்காலில் இருந்து உச்சிவரையுள்ள நாடி நரம்புகளில் பாய்ந்து செல்லும் ரஜோகுணத்தால் ஈர்க்கப்பட்டவர்களான ஐந்து சிவாச்சாரியர்கள் கருவறையில் நின்றுகொண்டிருந்தார்கள். ஆன்மீக சக்தியாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானவாளை ஏந்திய துணிவும் தேவைப்டும்போது தமது உயிரையே பணயமாக வைக்கும் மன உறுதியோடும் தம்மைத் தியாகம் செய்யும் வைராக்கிய பக்தியோடும் நின்றார்கள்.

மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு வெளியே மொகலாயப் படைகளோடு பக்தப் பெருமக்கள் போராடி மடிவதையும் சிந்தித்துப் பார்த்தார்கள். மொகலாயப்படை மீனாட்சி அம்மன் ஆலயச் சுற்று மதில்களையும் கோபுரங்களையும் கோவிலையும் இடித்தழித்து உள்ளே புகுந்து சிவலிங்கத் திருமேனியில் அன்னியர்களுடைய கை தீண்டுவதைத் தடுக்கவேண்டும் என்ற துணிவுடன் ஐந்து சிவாச்சாரியர்களும் அவசர அவசரமாக முடிவெடுத்தார்கள்.

வாழ்க்கையை இன்பமாக அனுபவிக்கும் பூஞ்சோலையாக நினைந்து வாழ்ந்த பக்தப் பெருமக்கள் போராளிகளாக நின்று மொகலாயப் படையை எதிர்த்துப் போராடி மடிந்துகொண்டிருக்கும் வீரமே இத்தருணத்தில் நமக்குத் தேவை.

நமது புத்தியையும், ஆன்மீக சக்தியையும், மீனாட்சி அம்மையின் அருளையும் எல்லாம் வல்ல சிவலிங்கப் பெருமானுடைய ஆற்றலையும் வேண்டிக்கொண்டு சிவலிங்கத் திருமேனியில் அன்னியர்களுடைய கை படாதிருக்க இறுதி முடிவெடுத்தார்கள்.

நம்மில் ஒருவர் மொகலாயரின் கையில் அகப்படாமல் தப்பித்துச் செல்லவேண்டும். மற்ற நால்வரும் போராடி மடியவேண்டும். அதற்காக திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்ப்போம். யாருடைய பெயர் வருகின்றதோ அவர் தப்பிச் செல்ல வேண்டும். அதற்குமுன் கருவறையிலுள்ள சிவலிங்கத் திருமேனியை பாதுகாக்க வழிசெய்ய வேண்டும்.

சிவலிங்கப் பெருமானுக்கு விளக்கேற்றிப் புஷ்பத்தால் அர்ச்சித்துவிட்டு கிளிக்கூண்டுபோல் ஒரு கவசம் தயார்செய்து அதனால் பெருமானை மூடிவிட்டு அதன்மேலே பாதுகாப்பாகப் பீடம் ஒன்றை அமைத்து நான்கு பக்கமும் கெட்டியாக அடைத்து மறைத்து விட்டு பீடத்தின்மேல் வேறொரு சிவலிங்கத்தை வைத்து பாவனையாகப் பூஜைசெய்ய வேண்டும். உள்ளே புகுந்து வரும் அந்நியர்கள் இதுதான் மூலலிங்கம் என்று நினைத்து உடைத்து ஏமாற்றமடைவார்கள். என்று ஆவன செய்து நிறைவேற்றி விட்டு நான்கு சிவாச்சாரியர்களும் ஆலயத்திற்கு வெளியே சென்று போராடி மாண்டார்கள். மொகலாயப்படை தமது இலக்கு நிறைவேறி விட்டதாக நினைத்து வெற்றிக்கொடி உயர்த்தினார்கள்.

தென்னிந்தியாவில் 1880ஆம் ஆண்டுக் காலகட்டத்தில் ஆங்கிலேயர் படைபலத்துடன் காலூன்றி ஆளத் தொடங்கியதும் மொகலாயரின் ஆட்சி ஒழிந்ததும் இந்துக்களின் மீனாட்சி அம்மன் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்யும் திருப்பணியில் ஈடுபட்டிருந்தபோது தப்பிச் சென்ற சிவாச்சாரியார் வெளிப்பட்டார். அப்போது அவருக்கு வயது 107. அவர் கருவறைச் சிவலிங்கப்பெருமான் இருக்கும் இடத்தைக் காட்டி அந்தப் பீடத்தின் கீழ் கிளிக்கூண்டுக் கவசத்தினுள் ஏற்றிவைத்த விளக்கு எரிந்தபடியும் அர்ச்சித்த பூ வாடாமலும் இருக்கக்கண்டு இந்துக்கள் பேரானந்தமடைந்தார்கள் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு. இந்தத் தெய்வீக ஆற்றலின் அருள் ஒளிக்கு ஈழநாட்டில் திருக்கோணேஸ்வரமும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

**ஒப்பு நோக்கு வரலாறு:**

திருக்கோணேஸ்வரத்தை இடித்தழிக்கப்போவதாகக் கங்கணம் கட்டிக்கொண்டு அனுராதபுரத்திலிருந்து படைகளுடன் வந்த கஜபாகு மன்னன் ஆலயத்தை அடைவதற்கு முன்னே ஆலயத்தில் பூஜை செய்துகொண்டிருந்த சிவாச்சாரியர்கள் அன்னியனான கஜபாகு மன்னனிடம் அகப்படாமல் தன்மானத்துடன் கடலில் குதித்து மாண்டார்கள் என்பதும் திருக்கோணேஸ்வரத்தின் மகிமையைக் கண்டும் கேட்டுமறிந்த கஜபாகுமன்னன் திருக்கோணேஸ்வரத்தை ஆதரித்து மானியம் எழுதிவைத்தான் என்பதும் திருக்கோணாசல புராண வரலாறு.

முன்னே கூறப்பட்ட நிகழ்ச்சிகளோடு திருக்கோணேஸ்வரத்தில் ஏற்பட்ட பேரழிவை ஒப்பிட்டு நோக்குவோம். கி. பி. 1624ஆம் ஆண்டு சித்திரை வருடப் பிறப்பன்று முன்னேற்பாட்டோடு மாறுவேடத்தில் புகுந்த போத்துக்கீசத் தளபதி கொன்ரன்டையின் டீசா தலைமையிலான போத்துக்கீசப்படை ஆலயத்தை அழித்துச் சிதைத்துக் கருவறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சிவலிங்கப் பெருமானை இரு துண்டுகளாக உடைத்து கடலினுள் வீசியது. வீசப்பட்ட சிவலிங்கத்தை 1968ஆம் ஆண்டு சேர்.ஆதர்க்கிளாக், மைக்வில்சன் என்ற இரண்டு வெளிநாட்டு ஆய்வாளர்கள் கடலின் அடியில் சுழியோடி எடுத்து வெளிக்கொணர்ந்தார்கள். அந்தக் கோணலிங்கம் கோணேஸ்வரத்தில் இன்றும் இருப்பதைக் காணலாம்.

போத்துக்கீசர் செய்த அழிவின்போது பக்தப்பெருமக்கள் ஆலயத்திலிருந்த கோணேசப்பெருமான், மாதுமை அம்பாள், பிள்ளையார், சந்திரசேகரர், வீரசக்தி, அஸ்திரதேவர் முதலிய தாமிர விக்கிரகங்களை எடுத்துச் சென்று திருக்கோணமலைக் கடற்கரையில் நிலத்துட்புதைத்து மறைத்து வைத்தார்கள். இறைவன் திருவருளால் 1950ஆம் ஆண்டு திருவுருவங்கள் வெளிப்பட்டன. அந்தத் திருவுருவங்கள் இப்போது கோணேசர் கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ளன. ஆதாரங்கள் கோணேசர் கல்வெட்டு, தெட்சணகயிலாய புராணம், போத்துக்கல்லில் உள்ள அஜுடா நூல்நிலைய ஆவணங்கள் முதலியன.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் மொகலாயர் படையுடன் இந்துக்கள் போராடியதுபோல, பிரித்தானியப் படையுடன் மருதுபாண்டியர்கள் போராடியதுபோல திருக்கோணேஸ்வரத்தில் பக்தப்பெரு மக்கள் போராடவில்லை. மதுரையில் சிவாச்சாரியர்கள் செய்த தந்திரம்போல திருக்கோணேஸ்வரத்தில் பக்தப் பெருமக்கள் திருவுருவங்களைத் தந்திரமாக எடுத்துச் சென்று காப்பாற்றினார்கள்.

இந்துக்களின் சமயப்பண்பாடும் பரிணாமமும் ஆலயத்திலும், ஆலயத்திலுள்ள தெய்வத் திருவுருவங்களிலும் இருந்துதான் பருணமிக்கின்றன. இவை மக்களின் வாழ்க்கையோடு சங்கமமாகி விட்டதால் இந்து சமயம் என்றென்றும் நிலைத்து நிற்கும், இன்று உலகளாவிய ரீதியில் இந்து சமயம் பரவி இருப்பதையும் அறிகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கந்தபுராண சிறுவர் அமுதம்

-மாதாஜி

## 43. நாளைக்குப் புறப்படுவோம்

வீரவாகுதேவரைப் பிடித்துத் தேவருடன் சிறையிடுங்கள் என்ற சூரபன்மன் கட்டளையைச் சிரமேற் கொண்ட பல்லாயிரம் அசுரர்கள் வீரவாகு தேவரைப் பிடிக்கப்போய் அத்தனைபேரும் மரணமானார்கள் அத்துடன் வீரவாகுதேவர் விட்டுவிடவில்லை. மிகப்பெரிய மலையையும் பிடுங்கி அரண்மனையில் வீசினார். அரண்மனை பலத்த சேதம். உயிர்சேதம் பொருட்சேதம் கண்ட சூரபன்மனின் கோபம் காட்டுத்தீபோல இருந்தது.

மீண்டும் பல வீரர்களை பல்லாயிரம் சேனைகளுடன் வீரவாகு தேவருடன் போர்செய்ய சூரன் அனுப்பினான். அத்தனை பேரும் குருதி வெள்ளத்துடன் அசுரவீரர்கள் அடியுண்டு சென்றார்கள். வீரவாகுதேவருக்கு மென்மேலும் இடையூறுகள் நேர்ந்தன. அவற்றையெல்லாம் முருகப்பெருமான் அருளால் நீக்கினார். முருகப்பெருமான் எழுந்தருளி இருக்கும் திருச்செந்தூர் வந்தார்.

"தீயாரைக் காண்பது தீது. தீயாருடன் இருப்பதும் தீது. தீயார் வாழும் நாட்டைப் பார்ப்பதும் தீது என்பதை உணர்ந்த வீரவாகுதேவர் முருகப்பெருமானை வணங்கி "சுவாமி! அந்தப் பாவிகளின் நாட்டைப் பார்த்த பாவம் உங்களைப் பார்த்தமையால் நீங்கியது" என்று கூறினார். பின்பு அசுரேந்திரனின் கெடுமதியான குணப்பண்புகளை வீரவாகுதேவர் கூறினார்.

வீரவாகுதேவர் சயந்தனையும், மற்றைய தேவர்களையும் சிறையில் சந்தித்த வரலாறுகளையும் இந்திரனுக்குக் கூறினார். திருச்செந்தூரில் வீரவாகு கூறிய செய்திகளை அறிந்த தேவர்கள் மகிழ்ச்சி கடலில் மூழ்கினார்கள்.

அதே நேரத்தில் வீரபத்திரரால் ஏற்பட்ட பாதிப்புகளால் மனம் வெதும்பினார். அமைச்சர்களின் ஆறுதல் மொழிகளைக் கேட்டு ஒருவாறு மனம் தெளிந்தான். வீரபத்திரரால் அழிக்கப்பட்ட நகரை பிரமனைக் கொண்டு மிகவும் அழகாகப் புதுக்கச் சொன்னான், அவ்வாறு அழிந்த நகரைப் பிரமன் புதுக்கியபின் இறந்த அசுரர்களையும் உயிர்ப்பித்தான். அசுரேந்திரன் மகிழ்ந்தான்.

## 44. அமைச்சரின் ஆலோசனை

உடனே சூரபன்மன் மந்திரிசபையைக் கூட்ட நினைத்து, சில ஒற்றர்களைத் திருச்செந்தூர் சென்று உளவு அறிந்து வரும்படி அனுப்பினான். ஒற்றர்கள் திருச்செந்தூர் சென்று உடனும் திரும்பி வந்தார்கள்.

ஒற்றர்கள் சூரனைப் "பார்த்து, நாளையே முருகனுடைய சேனைகள் போருக்குப் புறப்பட உள்ளன" என்று கூறினார்கள். சூரன் அவசர அவசரமாக மந்திரி ஆலோசனைக் கூட்டம் கூட்டினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனுக்கு தூதனாக வந்த வீரபத்திரர் திரும்பிப் போகும் போது, எமது படைகளையும் நகரத்தையும் அழித்து விட்டுச் சென்றான். இப்போது முருகன் நாளைக்கு வரப்போகிறானென ஒற்றர்கள் கூறுகின்றார்கள். நாம் இனி என்ன செய்யவேண்டும் எனச் சூரன் கர்ச்சித்தான். மந்திர ஆலோசனையில் இருந்தவர்கள் சூரனின் பெருமையைப் புகழ்ந்தார்கள். ஒரு சிலர் எதிரிகளை இமைப்பொழுதில் அழித்து விடுவோம் என்று கூறினார்கள். ஆனால் சிங்கமுகாசூரன் "அண்ணா செந்தில்மாநகரம் வந்த கடவுள் எத்தகைய சக்தி உடையவர் என்பதை அறியுங்கள்." உங்களுடைய ஆட்சி கொடுமையாக இருந்தால் என் சக்தியே அழிக்கும் என்று சூரனுக்குக் கூறியபோது சூரன் மழைக்கால இடிபோலச் சிரித்தான். யாரும் என்னை வெல்ல முடியாது. போருக்கு வருகின்றவர்கள் தோற்றுப் போவதைப் பாரெனக் கர்ச்சித்தான்.

**"எண்ணிலாதோர் பாலகன் எனைவெல்வன் என்கை**
**விண்ணிலாதவன் தன்னையோர் கனியென வெ்.கிக்**
**கண்ணிலாதவன் காட்டிடக் கையிலாதவன் போய்**
**உண்ணிலாதபேர் ஆசையால் பற்றுமாறு ஒக்கும்"**

என்று சூரபன்மன் மூர்க்கத்தனத்தில் பிடிவாதமாகப் பேசினான். அப்போது சகோதர பாசத்தால் சிங்கமுகாசூரன் சில அறிவுரைகள் கூறத்தொடங்கினான்.

## 45. அறிவுரை பலிக்கவில்லை

"முருகப்பெருமான் சிவபெருமானின் கண்களில் நின்று உதித்தஜோதி சிவபெருமானின் ஆற்றல் முழுதும் முருகனிடமுமுண்டு. அதனால் முருகனை அலட்சியம் செய்யாதே. பெரிய மரத்தின் சிறிய விதை முளைத்து பெரிதாகுவதில்லை. முருகனை பாலன் என்று எண்ணி முருகனுடன் போர் செய்து குலநாசத்தை உண்டாக்காதே."

**"அருவு மாகுவன் உருவமும் ஆகுவன். அருவும்**
**உருவு மில்லதோர் தன்மையும் ஆகுவன்; ஊழின்**
**கருமம் ஆகுவன்; நிமித்தமும் ஆகுவன்; கண்டாய்**
**பரமன் ஆடலை யாவரே பகர்ந்திடற் பாலார்"**

என்று பலவாறு சிங்கமுகாசூரன், சூரபன்மனுக்கு அறிவுரைகள் கூறினான். அதற்குச் சூரபன்மன், முருகப்பெருமானை இழித்து, காற்றினால் தள்ளப்பட்டும் நெருப்பில் கொழுத்தப்பட்டும், கங்கை நதியில் அலைக்கழிக்கப்பட்டும், சரவணப் பொய்கைகளால் மோதப்பட்டும், தாய் அல்லாத வேற்றுப் பெண்களிடம் பால் குடித்தும் அழுது விளையாடும் பாலனையா பரம்பொருள் என்றாய். அந்தச் சிறுவனை வென்று வெற்றி வாகை சூடுவேன். சிவபெருமானே போருக்கு வந்தாலும் போர்செய்து வெற்றியடைவேன். நீ என்னுடன் பிறந்தவனாய் இருந்தும் தேவர்களுக்காகப் பேசுகிறாய். இதனால் உன்னைச் சகோதரனாக அடைந்தமைக்கு வருந்துகிறேன். நீ உனது உடம்பில் உன்னை விட வேறு பகையும் உண்டோ? ஆயிரம் தலை, இரண்டாயிரம் தோள், பூமிக்குப் பாரமாக இருக்கின்றாய், நீ இருந்தென்ன? இறந்தென்ன? போவெனச் சீறினான். சூரபன்மன்.

## 46. போர் மூண்டது

சிங்கமுகாசூரனுக்குப் பாசம் பொங்கியது. "நான் எவ்வளவோ நல்ல அறநீதிகளைச் சொன்னேன். அண்ணன் சூரபன்மன் கெடுமதியே நினைக்கின்றான். என்னை இகழ்ந்து ஏசுகிறான். விதியை வெல்ல முடியுமா? எல்லாம் விதியின் படியே நடக்கட்டும்" என நினைத்தான். எப்படியும் சூரன் இறப்பான். அவன் இறக்க முன்பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இறப்பது நல்லது எனச் சிங்கமுகாசூரன் நினைத்தான். இதனால் தமையனிடம் சென்று, "அண்ணா நான் தவறு ஏதும் செய்திருந்தால் மன்னித்து விடுங்கள். நான் போருக்குச் செல்கிறேன். போரில் வெற்றியுடன் மீள்வேன். விடை தாருங்கள்" எனக் கேட்டான்.

தம்பியின் சொற்களைக் கேட்ட அண்ணன் சூரபன்மன் மகிழ்ச்சியடைந்தான். "உன்குணம் எனக்குத்தெரியும். என்னைச் சோதிக்க ஏதேதோ சொன்னாய் நீ இப்போது உன் ஊருக்குப்போய் போருக்கு ஆயத்தமாய் இரு. நான் கூப்பிடுகின்ற நேரம் வாவெனக் கூறித் தம்பியை அவன் ஊருக்கு அனுப்பினான்.

சூரபன்மன் அறநெறியை விட்டு அதர்மத்தைக் கடைப்பிடித்தான். அதனால் அவனும் அவன் குலமும் நாடும் அழியப் போகின்றது. 'அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்' என்பது பொய்யாகுமா. அரச நீதியும் மனுதர்மமும் நிலைமாறினால் அழிவுதான்.

கதிரவன் கீழ்திசை உதித்தான். திருச்செந்தூரில் எழுந்தருளி இருந்த கந்தவேள் வீரவாகுதேவரை நோக்கி, பழிக்கு அஞ்சாது பாவங்களைப் புரியும் சூரபன்மனையும், சூது நிறைந்த அசுரர்களையும் அழித்து, தேவர்களைக் காக்க வேண்டும். அதனால் வீரமகேந்திரபுரிக்குச் செல்ல வேண்டும் தேரைக்கொண்டு வாவெனக் கட்டளையிட்டான். தேவர்கள் தங்கள் துயர்நீங்கியதாகக் கந்தப்பெருமானை வணங்கிப் புகழ்ந்தார்கள். தேவ சேனைகள், பூதசேனைகள் எனப் பல்லாயிரம் சேனைகள் கந்தவேளுடன் புறப்பட்டன.

வீரமகேந்திரபுரி தென்கடலில் உள்ள ஒரு தீவாகும். வடக்கே உள்ள தீவு இலங்கை. மகாபாவியாகிய சூரபன்மனின் வீரமகேந்திரபுரியில் கந்தப்பெருமானின் புனித பாதம் படக்கூடாதென்று இலங்கையிலேயே ஏமகூடம் என்னும் பாசறை அமைத்து அதில் முருகப்பெருமான் வீற்றிருந்தார். ஏமகூடம் என்பது ஏழாம் படையாகிய கதிர்காமம் ஆகும்.

இப்போது நாரதர் சூரபன்மனிடம் சென்றார். சூரபன்மன் நாரதரை வரவேற்றான். சூரபன்மா வேறொருவன் உண்டாவென உலகம் பேசிக்கொள்கின்றது. இதில் இருபொருளுண்டு உன்னால் முடியாத காரியம் எதுவுமில்லை. நீ எதையும் கூசாமல் செய்வாய் என்பதாகும்.

'மகா யோக்கியர்கள் என்று கூறப்படும் தேவர்கள் கைலாயம் சென்று உன்னைப் பற்றி சிவபெருமானிடம் முறையிட்டார்கள். சிவபெருமான் நெற்றிக் கண்களில் இருந்து உதித்த முருகன், தந்திரமாகத் தாரகன் முதலியோரைக் கொன்றான். இப்போது உன்னுடன் போர்புரிய பெருஞ்சேனைகளோடு திருச்செந்தூரை விட்டு வந்து இலங்கையில் ஏமகூடத்தில் தங்கியுள்ளான். நாளைக்குப் போருக்கு வருவான் இதைச் சொல்லவே வந்தேன்' என்று கூறிய நாரதர் சென்று விட்டார்.

சூரபன்மன் வருணன் ஒற்றர்களோடு பேசிக்கொண்டிருக்கும் போதே இந்திரன், பிரமா, திருமால் முதலிய தேவர்கள் பூதப்படை சூழ முருகப்பெருமான் வீரமகேந்திரபுரிக்கு வந்துவிட்டார் என்ற செய்தியை ஒற்றர்கள் கூறினார்கள். உடனே பானுகோபனைப் போருக்குப் புறப்படும்படி தூதுவர்கள் மூலம் பானுகோபனிடம் அறிவித்தார்கள்.

(தொடரும்..........)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயத்தின் மையம்

கலாநிதி கவிஞர். வி. கந்தவனம் அவர்கள்
குரும்பசிட்டி, (கனடா)

தனி ஒருவரால் தொடக்கி வைக்கப்படாத பெருஞ் சமயம் இந்து சமயம். எப்பொழுது தொடங்கப்பட்டது என்பதையும் சொல்ல முடியாத சமயம் அது. அத்தோடு பற்பல தெய்வங்களை வணங்குகின்ற சமயமும் அதுதான்.

சரி, இவை பெரும்பாலும் எல்லோருக்கும் தெரிந்தவையாம். இவற்றைத் தவிர இந்து சமயத்தைப் பற்றி வேறு என்ன எங்களுக்குத் தெரியும்?

சொல்ல முடியுமா? அவைபற்றிச் சிந்தித்ததுண்டா?

பாற்கடலில் வாழும் மீன்களுக்குப் பாலின் அருமை பெருமைகள் தெரிவதில்லை. அதுபோல இந்து சமயத்திலே பிறந்து இந்து சமயத்திலே வாழும் எங்களுக்கும் அதன் இயல்புகளோ சிறப்புகளோ பெரிதாகத் தெரிவதில்லை.

தெரியவேண்டும் என்று முயன்றாலும் கூட முடிவதில்லை. எமக்கு மட்டுமா? ஞானிகளுக்கும் அதே நிலைதான். ஞானிகளுக்கு மட்டுமா? தேவர்களுக்குமே தெளிவில்லாத சமயம் எங்கள் சமயம்.

அப்படிச் சொல்லுகின்றபொழுது திருமாலையும் பிரமாவையும் நினைத்துச் சொல்கின்றேன்.

இந்து சமயம் போற்றும் மும்முர்த்திகளுள் சிவபெருமான் ஒருவர். அவரது அடியைக் காணத்திருமாலால் முடியவில்லை முடியைக்காண வேதங்களில் வல்ல பிரமதேவராலும் முடியவில்லை. அத்தகையவர்களுக்கு இந்து சமயம் எப்படி விளங்கமுடியும்?

அந்த அளவுக்கு இந்தச் சமயம் ஆழமானது அகலமானது. ஆழக் கடலின் ஆழமில்லாத கரையோரத்தில் நின்றவாறு வலையை வீசுகின்றேன். அலையோடு அள்ளுண்டு வந்து அகப்பட்டவற்றுள் கஞ்சல் குப்பைகளை வீசி விட்டு எஞ்சியவற்றைக் கழுவித் துடைத்துத் தருகின்றேன்.

இதனை முதலிலே மனத்தில் இருத்திக்கொண்டு தொடர்ந்து படியுங்கள். சிறியதோ பெரியதோ நிச்சயம் ஏதாவது பலன் கிடைக்கும்.

இந்து சமயத்தின் தனித்துவமான இயல்புகளில் என்னை மிகவும் கவர்ந்தது அதன் சுதந்திரம். அதாவது அது எமக்கு வழங்கும் உரிமைகள்.

சுதந்திரம் என்றால் தனது விருப்பத்துக்கு அமைய தனது இயல்புகளையும் திறமைகளையும் கூட்டுமொத்தமான ஆளுமையையும் வளர்த்தெடுக்க ஒருவருக்கு இருக்கக்கூடிய உரிமையுடைமை.

இந்து சமயம் என்றதும் நாம் வணங்கும் தெய்வத்தின் பெயர்தான் எமக்கு முதலில் நினைவுக்கு வருகிறது. அது இயல்புதான். ஆனால் இந்து சமயம் கடவுளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

இன்னுஞ் சொல்லப் போனால் கடவுளிலும் மனிதனுக்குத்தான் இந்து சமயம் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றது.

இந்த முக்கியத்துவம் மனித மனத்துடன் தொடங்குகின்றது. இந்து சமயத்தின் மையப் புள்ளியே மனந்தான். மனந்தான் கடவுள். உடல்தான் கோயில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உள்ளம் பெருங்கோயில் ஊன்உடம்பு ஆலயம்" என்றார் திருமூலர். இதனையே 'காயமே கோயில்' என்றும் "மனமணி லிங்கம்" என்றும் வழிமொழிந்தார் அப்பர் பெருமான்.

மனத்துக்கு எமது சமயம் முக்கியத்துவம் கொடுக்கிறது என்றால் மனம் போகும் போக்கெல்லாம் போகலாம் என்று அர்த்தமல்ல. உண்மையில் மனத்தைக் கட்டுப்படுத்துவதே உள்நோக்கம்.

கட்டுப்பாடு எப்படிச் சுதந்திரமாகும் என்கிறீர்களா? சமயக் கட்டுப்பாடு அடக்குமுறையன்று. மனத்தைக் கட்டுப்படுத்தி மனிதனுக்கு நல்வாழ்வை அளிக்கவே சமயம் முயல்கிறது. கட்டுப்பாட்டோடு கூடிய சுதந்திரம்தான் மனித சுதந்திரம் கட்டுப்பாடற்ற சுதந்திரம் விலங்குச் சுதந்திரம்.

மனம், மனத்தைக் கட்டுப்படுத்தும் சுதந்திரமும் மனத்துக்குத்தான் வழங்கப்பட்டுள்ளது வேறு ஒன்றுக்கோ வேறொருவருக்கோ அல்ல. அதனால் இது அடக்குமுறை ஆகாது.

சமயம் எந்த வகையிலும் மனிதனை அடக்க முயல்வதில்லை.

**நன்றி -**

**- சிவத்தமிழ் இதழ் ஜேர்மனி.**




**கலாநிதி**
**தங்கம்மா அப்பாக்குட்டி**

## "சிவத்தமிழ்ச் செல்வியின் சிறப்பிதழ்"

சைவத்திற்கும் தமிழுக்கும் அளப்பரிய தொண்டாற்றி வரும் துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சேவையைக் கௌரவிக்கும் முகமாகத் தை 2005 **"சிவத்தமிழ்" சிவத்தமிழ்ச் செல்வியின்** சிறப்பிதழாக மலர்கிறது.

சிறப்பிதழுக்கு அவர்தம் சேவையை கவிதையாகவோ கட்டுரைகளாகவோ எமக்கு 01-10-2004 முன்னதாக அனுப்பிவைக்கவும். இலங்கையில் வசிப்பவர்கள், கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். ஏனையோர் நேரடியாகச் **சிவத்தமிழ்** முகவரிக்கும் அல்லது மின்னஞ்சலுக்கும் அனுப்பி வைக்கலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

**சிவத்தமிழ்**

**Dr. M. S. Sivakumaran, B. F. A.**
Postfach 2765
**58477** Lüdenscheid
Germany

**இலங்கை**
**Dr. Vani, Sivarajan**
118 Vivekananda Hill,
Colmbo, 13
Sri-Lanka.

Vettimaniy@hotmail,com.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ் தொடர்ச்சி

**(அவுஸ்ரேலியா சிட்னி மாநகரில் அமைந்துள்ள முருகன் கோவில் தமிழ்க்கல்வி கலாசார மண்டபத்தில் "திருவாசகமும் நாமும்" என்ற தலைப்பில் உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. க. வி. விக்கினேஸ்வரன் அவர்கள் ஆற்றிய உரையின் இரண்டாம் பாகம்)**

# திருவாசகமும் நாமும்

தேனே, அமுதே, கருப்பஞ்சாறே, இவைபோல் இனிக்கும் மகானே, அடியேன் உன்னை வந்து கலக்குமாறு அருள் புரிவாயாக என்று மட்டும் கூறியிருக்கலாம். ஆனால், அப்படி மட்டுங் கூறாது அடை மொழியாகத் தன் உள் உணர்வுகளையும் கொட்டி வைக்கிறார். தானொரு வஞ்ச கமானவர் என்று மற்றைய அடியார்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துத் தன்னை அடையாளம் காண்பிக்கின்றார். இது இயல்பாகவே அடியார்களின் மத்தியில் நடைபெறுவ துண்டு. இன்னொரு அடியார் இறைவன் பால் காட்டும் பக்தியைக் கண்டு தானும் அந்தளவு இறைவன் மேல் அன்பு வைக்க வில்லையே என்று ஏங்குவது அடியார்க ளின் குணாதிசயம். உண்மையில் அவர்கள் மிகச் சிறந்த பக்திமான்களாக இருப் பார்கள். ஆனால் தங்கள் அன்பு போதாது என்ற எண்ணத்தில், தங்களைக் தாங்களே குறைத்துப் பேசுவார்கள். இன்னொரு அடியாருடன் தன்னை ஒப்பிடுவதும் ஒரு வித அகந்தை நிலைதான். ஆனால் அந்த அகந்தை நிலையையும் அடையாளம் காண்கிறார் மணிவாசகர். அதனால்தான் "யானே பொய்" என்று எடுத்தவாக்கிலேயே குறிப்பிடுகிறார். திருவெம்பாவையிலும் இந்தப் பொய் பற்றிக் கூறுகிறார் இன்னொரு விதத்தில்.

"மாலறியா நான் முகனுங் காணாமலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறி கடைதிறவாய்" என்றார்.

அதாவது "விஷ்ணு அடியையும் பிரம்மா முடியையும் காண முடியாதவாறு மலையாக வளர்ந்து நின்ற இறைவனை நாங்கள் மட்டும் அறிவோம் என்று பொய் பேசுகின்ற பாலும் தேனும் ஊறினாற் போன்ற இதழ்களையுடைய தந்திரக் காரியே! (படிறு என்றால் கபடம்) வாயிற் கதவை திறப்பாய்!" என்றார். இறைவனை நாங்கள் மட்டும் அறிவோம் என்பது பொய் என்றார். மற்றவர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு தானும் ஒரு சிறந்த பக்தன் என்று கூற அவரின் மனம் கூசுகிறது. அவரின் கடந்த கால வாழ்க்கையையும் யோசிக் கிறார். பெரிய பதவியில் இருந்த தான் தன்னை ஒரு பொருட்டாக நினைத்து இந்த உலகில் பவனி வந்ததையும் உண்மை யான பக்தர்கள் தமது உடலையும் அதனோடு சேர்ந்த பதவிகளையும் கருதாது இறைவனை மட்டுமே கருதி மற்றவற்றை ஒழித்தனர் என்ற விதத்தில் அவர்களோடு ஒப்பிடும் போது தான் பொய்யனே என்று கண்டு :யானே பொய்" என்கிறார். 86வது பாடலில் மற்றைய அடியார்களை நினைத்து கூறுகிறார்.

"அறவே நின்னைச் சார்ந்த அடியார்
மற்றொன்று அறியாதார்
சிறவே செய்து வழி வந்து சிவனே
நின்தாள் சேர்ந்தாரே"

என்று மற்றைய அடியார்கள் நீயே கதி என்று வேறொன்றையும் யோசிக்க மாட்டார்கள். சிறப்பான காரியங்களில் ஈடுபட்டு உன்னையே வந்தடைந்தார்கள். நான் அப்படியில்லை. என்னையும் ஒரு பொருட்டாக நான் நினைத்து இருந்ததால் "யானே பொய்" என்கிறார்.

அதை வேறுவிதமாகவும் அர்த்தம் கற்பிக்கலாம். "நான்" என்ற ஒன்று இல் லாது, நீயே நீக்கமற எங்கும் வியாபித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் போது "நான்" என்ற எண்ணமே பொய்யானது தானே. ஆகவே உன்னையே எண்ணாது என்னை வேற்றுமைப்படுத்தி எனக்கொரு நிலையான இருப்பு இருப்பதாக நான் கற்பனை பண்ணியதால் அந்தக் கற்பனையான "நான்" என்ற நிலை பொய் யானது. ஆகவே "யானே பொய்" என்று கூறினார். என்றும் கொள்ளலாம்.

என்னை வேற்றுமைப்படுத்தி நான் வாழும் பொழுது என் சிந்தனைகள் என்னைப் பற்றியே சதா சிந்தித்துக் கொண் டிருக்கின்றன. பதவிகள் என்னை ஒரு பொருட்டாக எண்ண வைத்து "நான்" என்ற அந்த அலகிற்கு ஒரு முக்கியத்துவத்தைக் கொடுத்து வைத்தது. அவ்வாறு சிந்தித்த என் நெஞ்சம் தன்னை உயர்த்தி வைத்து பேசவே தலைப்பட்டது. உண்மையில் இறைவனின் படைப்பில் இந்த மனிதனாகிய நானும் ஒரு படைப்பே. என்னை அவன்தான் வழி நடத்திக்கொண்டிருக்கிறான் என்ற உண்மை நிலையை உணராது "நான் ஒரு முக்கியமானவன்" என்று என்னை நான் சிந்தித்து வந்தமையால் என் நெஞ்சம் பொய்யான கற்பனையில் ஈடுபட்டதால் "என் நெஞ்சம் பொய்" என்கிறார். "நான்" அற்ற நிலையே இறைவா உன்நிலை. அங்கு நீ குடிபுகுந்து கொள்கிறாய். ஆனால் என் நெஞ்சும் "நான்" என்ற ஒரு கற்பனையை வளர்த்து வந்துள்ளது. அந்த அளவில் என் நெஞ்சும் அதன் சிந்தனையும் பொய்யே என்று கூறகிறார்.

அடுத்து, தன் அன்பையே குற்றம் காண்கிறார். "என் அன்பும் பொய்" என் கிறார். அதற்குக் காரணம் அன்பிருந்தால் அழுகை இருக்க வேண்டும் என்பதால்தான் என்று 88வது செய்யுளில் கூறப்பட் டிருப்பதில் இருந்து ஊகிக்கக்கூடியதாக உள்ளது. அந்தச் செய்யுள் பின்வருமாறு

**அழுகேன் நின்பால் அன்பாம் மனமாய்**
**அழல் சேர்ந்த**
**மெழுகே அன்னார் மின்னார் பொன்னார்**
**கழல்கண்டு**
**தொழுதே யுன்னைத் தொடர்ந்தாரோடுந்**
**தொடராதே**
**பழுதே பிறந்தேன் என் கொண்டுன்னைப்**
**பணிகேனே.**

அதாவது, உன்னிடத்து அன்பு மயமான உள்ளத்தோடு அழுது தொழமாட்டேன். (அழுகேன் நின்பால் அன்பாம் மனமாய்) ஆனால் உன்னுடைய மற்றைய அடி யார்கள் என்ன செய்கின்றார்கள்? தீயிடைப் பட்ட மெழுகு போன்ற உள்ளத்தைக் கொண்ட உன் மற்றைய அடியவர்கள் மின் ஒளி பொருந்திய அழகிய நினது திருவடிகளைக் கண்டு வணங்கி உன்னைப் பின் தொடர்ந்து வந்துள்ளனர். (அழல் சேர்ந்த (தீயில் சேர்ந்த) மெழுகே அன்னார் மின்னார் பொன்னார் கழல் கண்டு தொழுதே உன்னைத் தொடர்ந்தார்) ஆனால் அவர்களுடன் தொடர்ந்து செல்லாது வீணே பிறவி எடுத்தவனாகிய நான் எப்படித்தான் உன்னை வணங்கு வேன்? "தொடர்ந்தாரோடு தொடராதே பழுதே பிறந்தேன் என் கொண்டுன்னைப் பணிகேனே" என்று கேட்கிறார்.

ஆகவே தீயில் போடப்பட்ட மெழுகுபோல் யான் உருகி உன்னைத் தொடர்ந்து வராததால் "என் அன்பும் பொய்" என்கிறார் மணிவாசகர்.

ஆகவே அவர் தமது உடல், உள்ளம், அறிவு எல்லாமே பொய்யானவை என்று கூறிவிட்டார். "யானே பொய்" (இந்த மெய்யே பொய்) "எந் நெஞ்சும் பொய்" (நான் என்ற அகந்தையில் வாழ்ந்ததால் என் அறிவே பொய்) "என் அன்பும் பொய்" (உண்மையான அன்பால் பீடிக்கப்பட்டு மெழுகாக உருகாததால் என் உள்ள உணர்ச்சிகளும் பொய்) என்று தன் உடல், உணர்வுகள், அறிவு (Body, Mind and Intellect) யாவற்றையும் பொய்யாகக் காண் கிறார். உண்மையான ஒரே ஒரு பொருள் இறைவனாக இருக்கும் பொழுது அந்த இறைவனோடு இரண்டறக் கலக்காத யான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல், அறிவு, உணர்வு ரீதியாகப் பொய்யே என்று கூறி விட்டு, தனக் குத்தானே விமோசனம் பெறும் வழியையும் அவரே கூறிக்கொள்கிறார். "ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்கிறார்.

என் அறிவுக்கு எட்டிய வரையில் பக்தியின் இலக்கணம், திருவாசகத்தின் ஒருவாசகம், திருச்சதகத் தனிச்செய்யுளின் உள்ளுரை இந்தச் சில வார்த்தைகள் தான்.

"ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே"

அந்தக் கருத்தில் மட்டுமே மணிவாசகருக்கு ஒரு திடமான நம்பிக்கை இருந்தது எனலாம். எதுவுமே பொய்யான என் வாழ்க்கையில், பாவியான என் வாழ்க்கையில் எனக்கு விமோசனத்தை அளிக்க வல்லது அழுகை ஒன்றுதான் என்கிறார். "அழுதால் உன்னைப் பெறக்கூடும்" என்று அவர் கூறவில்லை. அடித்துக் கூறுகிறார் "அழுதால் உன்னைப் பெறலாமே" என்று அழுதால் உன்னை நிச்சயமாகப் பெறலாம் என்று கூறுகிறார். எப்படிப்பட்ட அழுகை என்று நினைக் கிறீர்கள்? "வினையேன் அழுதால் உன் னைப் பெறலாமே" என்கிறார். அதாவது "வினையேன்" என்கிறார். அழுவதானால் "பாவவினைகளைச் சுமந்து வந்துள்ளேன். இனியும் பாவங்களைச் சுமக்கும்படியாக நடந்து கொள்ள மாட்டேன்" என்று பிழையுணர்ந்து வருந்தி அழுதால்தான் உன்னைப் பெறலாமே என்ற கருத்துப்பட "ஆனால் வினையேன் அழு தால் உன்னைப் பெறலாமே" என்று கூறுகிறார். அழுகையானது பாவவினை களின் சுமையைக் கரைக்கவல்லது. அந்த அழுகை இறைவனில் ஒன்றி அழுதால்தான் பயனுடையதாகும். அப்பேர்ப்பட்ட அழு கையை வரவிடாது தடுப்பது அஞ்ஞானம். அஞ்ஞான மாயையில், துயிலில் உறங்கு வோருக்கு அழுகை வராது. ஆணவம் தான் மேலோங்கும். அகந்தையில் உழல்பவருக்கு அழுகை வராது.

திருவெம்பாவையில் ஒரு பாடல். மணிவாசகரின் மற்றொரு பாடல் தான் நாளை காலை கேட்பீர்கள்

**அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்**
**உன்னற்கரியான் ஒருவன் இருஞ்சீரான்**
**சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்**
**தென்னா என் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்**
**என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்**
**சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ**
**வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்**
**என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.**

இச்செய்யுளின் கருத்தை அவதானிப்போம்.

உறங்கிக்கொண்டிருக்கும் பெண்ணிடம் மற்றைய பெண்கள் மார்கழி நீராட கேட்டு வந்து கூறுகின்றார்கள்...

அன்னே! (பெண்ணே) உன் விளையாட்டுக்களில் இந்தப் பாசாங்கும், துயில் நடிப்பும் ஒரு சில விளையாட்டுக் களோ? அமரர்கள் ஆகிய தேவர்கள் பலர் கூட எண்ணி அடைதற்கு அரியவனாகிய ஒப்பற்ற அந்த சிவ பெருமானின் சின்னங் களாக சங்கு முதலியவை ஒலிக்கும்போது "சிவ சிவா" என்று கூறி மற்ற நாட்களில் வாய் திறப்பாய். "தென்னாடுடைய சிவனே" என்று அதாவது "தென்னா" என்று கூறு முன்னமே தழல் இடைப்பட்ட மெழுகுபோல் உருகுவாய். ஆனால் நாங்கள் எத்தனை அடைமொழிகள் பாவித்து விட்டோம். "எனது இனிய தலைவன்" "எனது வேந்தன்" "இன்னமுததானவன்" என்று நாங்கள் எல்லோருமே தனித்தனியே இயம்புகிறோம். ஆனால் நீயோ இன்னமும் தூங்குகிறாயே. அன்பில்லாத திண்ணிய மனமுடைய அறிவிலார் போலச் சும்மா கிடக்கின்றாயே. இந்தத் தூக்கத்தின் சிறப்புத்தான் என்னென்று உரைப்பது என்கிறார்கள் துயில் கொள்ளும் அல்லது பாசாங்குத் துயில் கொள்ளும் பெண்ணைப் பார்த்து மற்றைய பெண்கள்.

அஞ்ஞான இருளில் வாழ்பவருக்கும் வன்னெஞ்சம் இருக்கும். அந்நெஞ்சில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகை வராது. அவர்கள் வாளாக் கிடப்பார்கள். சும்மா வாழ்க்கையை தமது அஞ்ஞான இருளிலேயே கடத்திக்கொண்டு போவார்கள். அந்த அஞ்ஞானத் துயிலின் தன்மையைத் திருவண்ணாமலைப் பெண்களின் வாயால் திருவெம்பாவையில் வரவழைக்கிறார் மணிவாசகப்பெருமான்.

அழுகை இன்றி அஞ்ஞானத் துயிலில் உறங்கிக் கொண்டிருக்கும் பாவிகளான எம்மைத்துயில் எழுப்பும் நோக்கத்துடன் தான் மணிவாசகர் மார்கழி நீராடலை விதந்து திருவெம்பாவை இயற்றினார்.

மணிவாசகருக்கு முன்னைய காலத்தில் துயிலெடையென்று ஒரு வழக்கம் இருந்தது. துயிலெடையாவது தனது வீர பராக்கிரமத்தால் பகைவரை வென்று வாகைமாலை சூடி பாசறையில் எவ்வித கவலையுமின்றி படுத்துறங்கும் மன்னவனைச் சூதர் (புகழ்பாடுவோர்) காலையிற் சென்று புகழ்ந்து பாடித்துயில் எழுப்புவதாகும். இந்தத் துயிலெடை முறையினை அனுசரித்தே மணிவாசகப் பெருந்தகை திருப்பெருந்துறையில் உறைந்த சிவபெருமானை விழித்து திருப் பள்ளி எழுச்சியை பாடினார்.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலிகூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண்டின்னருள் புரியும்
எம்பெருமான்பள்ளி எழுந்தருளாயே.

என்பது நான்காவது திருப்பள்ளி எழுச்சிப் பாடல். சிவபெருமானைத் துயில் எழுப்பப் பாடப்பட்ட பாடல்களில் ஒன்று இது.

திருவெம்பாவைக் காலத்தில் எல்லாச் சைவ ஆலயங்களிலும் திருவெம் பாவை பாடமுன் திருப்பள்ளி எழுச்சியும் ஓதப்படும். இவையிரண்டையும் ஓதுதல் பன்னிரு திருமுறைகளை ஓதுவதற்குச் சமமாகும் என்று பெரியோர்கள் கூறுவர்.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் இருந்த காலத்தில் பெண்களின் நீராடல் நோன்பு என்னும் நோன்பு நோற்கப்பட்டதை அவதானித்தார். கன்னிப்பெண்கள் தமது எதிர்கால வாழ்க்கையை நன்றாக வாழவேண்டும் என்ற எண்ணத்தில் மார்கழி மாதம் முழுவதும் வைகறையில் துயில் எழுந்து காத்யாயணி என்ற சக்தியை வழிபட்டு வந்ததை மாணிக்கவாசகர் அவதானித்தார். தாம் விரும்பும் மணவாளன் தமக்குக் கிடைப்பான் என்ற வலுவான நம்பிக்கையில் பெண்கள் நோன்பைக் கடைப்பிடித்தார்கள். அதிகாலையில் எழுந்து இப்பெண்கள் ஒருவரை ஒருவர் துயில் எழுப்பிச் சென்று சுனையில் நீராடுதல் இன்நோன்பின் கவர்ச்சி தரும் நிகழ்வாக இருந்தது. நீராடியபின் கரையில் ஈரமணலால் பாவை செய்து அதை சக்தியாக பாவனை செய்து, பூசித்து வழிபட்டு அதனிடம் தமது குறையினை வெளிப்படுத்துவதும் இந்த நிகழ்ச்சியின் ஓரங்கம்.

மாணிக்கவாசகர் திருவண் ணாமலையில் இருந்த காலத்தில் இருந்த காலத்தில் இந்த நீராடல் நோன்பு நிகழ்வினை அவதானித்தே திருவெம்பா வையை இயற்றி அருளினார். மனோன்மணி, சர்வபூததமனி, பலப்பிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை என்கின்ற ஒன்பது சக்திகளுள் முன்னின்றவர் பின்னின்றவரைத் துயில் எழுப்புவதாகவும், எல்லோரும் கூடி இறைவனை வாழ்த்தும் பொருட்டு தம்முள் பாடுவதாகவும் அவ்வாறு இயம்பிய பாடல்களின் தொகுதியே திருவெம்பாவை என்றும் தத்துவ உணர்ச்சி கொண்ட ஒரு சாரார் கூறுவர்.

ஆகவே துயிலெடை, பாவை நீராடல் நோன்பு என்ற இரு நிகழ்வுகளின் பிரதிபலிப்பாகத் தான் திருப்பள்ளி எழுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியும் திருவெம்பாவையும் ஆக்கப்பட்டன. ஆனால் இவற்றின் குறிக்கோள் அழுது, உருகி இறைவனுடன் பக்தனைச் சேர வைப்பது தான் என்றால் மிகையாகாது. "அழுதால் உன்னை பெறலாமே" என்று மணிவாசகர் அழுத்தமாய்க் கூறியதில் இருந்து உணர்வு வயப்பட்ட தூய உள்ளமே உத்தமனைக்காண வழிவகுக்கும் என்ற பக்திக் கோட்பாட்டை நிலை நிறுத்துகிறது. உணர்வில் ஒன்றிப் பரமனில் கலக்க திருவாசகம் ஒரு தோணியாக அமைகிறது.

அழுவது கூடாது என்று தான் அறிவு எங்களை வளர்த்து வந்துள்ளது. ஆனால் எத்தனையோ பிறவிகளில் நாங்கள் சேர்த்துக்கொண்ட பாவக்கறை களைக் கரைத்து நிர்மமாக்க உதவுவது இந்தக் கண்ணீர் தான். பக்தியில் பிறந்த கண்ணீர். பாவச் சுமையைக் குறைத்து மனிதனை வீடடைய வைப்பது இந்தப் பக்தியில் பிறந்த கண்ணீர்தான். அந்தக் கண்ணீரை எம்மில் இருந்து கறக்கக் கூடியது திருவாசகம் தான்.

(தொடரும்.......)

# தீபாராதனை

இறைவனுக்குச் செய்யப்படும் பதினாறு வகை உபசாரங்களில் ஒன்று தீபாராதனை. தீபாராதனைக் காலத்தில் தெய்வங்கள் பலரும் தீபங்களில் அமர்ந்து இறைவனை தரிசித்துச் செல்வதாக ஐதிகம்.

தீப வழிபாட்டில் பல வகை தீப வரிசைகள் காட்டப்படுகின்றன.

நட்சத்திரதீபம் காட்டப்படும்போது நட்சத் திரங்கள் இறைவனை வழிபட்டு ஒளிபெறுகின்றன. ஒன்பது தீபங்கள் நவசக்திகளைக் குறிக்கும். ஏழு தீபங்கள் சப்த மாதர்களைக் குறிக்கும். பஞ்ச தீபங்கள் நிவர்த்தி கலை, பிரதிட்டா கலை, வித்யா கலை, சாந்தி கலை, சாந்தி அதீதகலை என்ற ஐந்து கலைகளைக் குறிக்கும். மூன்று தீபம் சூரியன் சந்திரன், அக்னி என்ற மூன்று ஒளிகளையும், ஒற்றை தீபம் சரசுவதியையும் குறிப்பதாகச் சொல்வர். தீபாராதனை நடக்கும் பொழுது இறுதியாக கும்பதீபம் காண்பிக்கப்பெறும். கும்பதீபம் சதாசிவதத்துவத்தைக் குறிக்கும்

தீபாராதனை செய்யும் பொழுது மூன்று முறை காட்டுவார்கள். முதன் முறை உலக நலத்திற்காகவும், இரண்டாவது முறை ஊரில் உள்ள மக்கள் நல்வாழ்விற்காகவும், மூன்றாம் முறை ஐம்பெரும் பூதங்களால் இடையூறின்றி நல்லது நடக்க வேண்டும் என்பதற்காகவுமாக மும்முறை தீபம் காட்டுவர்.





# நன்றி



சுவிஸ்லாந்து நாட்டைச் சேர்ந்த திரு. சு. கதிர்காமநாதன் தம்பதிகள் தமது மகள் மாதங்கியின் பிறந்த நாள் அன்பளிப்பாக ஒரு தொகையை அன்பளிப்பாக **'அருள் ஒளிக்கு'** வழங்கியுள்ளார்கள். செல்வி க. மாதங்கி அவர்கள் கல்வியில் மேம்பட்டு உயர பிரார்த்திக்கின்றோம்.

**- ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் யார்?

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, அவர்கள்**

**நா**ன் யார்? என்ற வினா உலகந் தோன்றிய காலந்தொடங்கி இருந்து வருகிறது. அதற்கு விடை காணும் முயற்சியும் நடந்து வருகிறது.

நான் யார்? என்ற வினாவுக்கு எளிதில் விடைகண்டு சொன்னவன் உலகாயதன். இந்த உடம்புதான் நான் என்று தீர்மானஞ் செய்தவன் அவன்.

நான் யார்? என்ற வினாவுக்கு அரிதின் முயன்று வேத உபநிடதங்களை ஆராய்ந்து விடைகண்டு சொன்னவன் வேதாந்தி.

காணப்பட்ட இந்த உலகந் தோன்றி நின்று ஒடுங்குவதற்குத் தாரகமாய், அதனோடு அத்துவிதப்பட்டு நின்றது எதுவோ அதுவே பிரமம். அந்தப் பிரமந்தான் நமது இருதயக் குகைக்குள் 'நான்' 'நான்' என்று சொல்லிக்கொண்டிருக்கிறது. ஆகவே 'நான்பிரமம்' என்று முடிவு செய்தவன் அந்த வேதாந்தி.

உலகாயதன் வேதாந்தி ஆகிய இருவருஞ் சொன்ன விடைகளைக் கேளாமலே கேட்டுக்கொண்டு, அவர்களைப் பாராமலே பார்த்துக்கொண்டு அவர்கள் எதிரில் எழுந்தருளியிருக்கின்றார் மௌனதவ முனிவர் ஒருவர். பயனில் சொற் பயிலாதவர் அவர்.

எதிரிலிருந்த ஏனையவர்கள் மௌனதவமுனிவர் முகத்தை நோக்குகின்றார்கள். அவருடைய முகாரவிந்தம் மெல்ல மெல்ல இதழ் அவிழுகின்றது.

இருவர் கூற்றும் பொய்

என்கிறது, அம் முனிவருடைய திருவாய் மலர்.

எங்கும் நிசப்தம் குடிகொள்ளுகின்றது. அதே சமயம் ஒருவகை ஏக்கம் தலை நிமிர்கின்றது.

உலகாயதம் பொய்யாய்ப் போய்த் தொலையட்டும். வேதாந்தமுமா,

பொய்

என்ற வினா எழுகின்றது.

தவமுனிவர் சற்றேனுந் தயங்காது தமது நாவைச் சற்றே பெயர்த்து,

'புரை தீர்ந்த'

என்று கூறி அமைகின்றார்.

வேதாந்தம் 'நான் பிரமம்' என்பது 'புரை தீர்ந்த பொய்' என்றது ஆழ்ந்த சிந்தனைக்குரிய அருங்கருத்து.

> 'பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரை தீர்ந்த
> நன்மை பயக்கும் எனின்'

உபநிடத முனிவர்கள் சார்ந்ததன் வண்ணமாகும் ஆன்மாவை உலகாயதன் முடித்துக்கட்டிய இந்த உடம்பின் வேறாகக் காணுதற்கு வழி வகுத்திருக்கின்றார்கள். முனிவர்கள் வழியிற் செல்லுஞ் சீடன், உடம்பைப் பொய்ச்சார்பு என விடுத்து, மெய்ச்சார்பை உணர்ந்து, மெய்ச்சார்பாகிய பிரமமாகத் தன்னைக் காணுகின்றான். ஒருநாள் நான் உடம்பு என்றவன்,மற்றொருநாள் நான் பிரமம் என்பான். அவ்வளவில் முனிவர் உபநிடத பாடத்தை முடித்து ஆசி வழங்கி மகிழுகின்றார்.

அப்பால்,

சாதகனாகிய மாணவனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கண்ட இவை அல்லேன் நான்
காணாக் கழிபரமும் நான் அல்லேன்'

என்பதாகிய சிவஞானம் சித்திக்கின்றது.

மேற்காட்டிய தொடர்கள் சிவஞான சித்தியார் ஒன்பதாஞ்சூத்திரம் ஏழாஞ் செய்யுளில் முதற்கண் உள்ளவை.

**கண்ட இவை - காணப்பட்ட தேகாதிப்**
**பிரபஞ்சங்கள், காணாக்கழிபரம் - கருவி**
**கரணங்களுக்கு எட்டாத பிரமம்.**

யோகிகள் கருவி கரணங்களை விலகாமல் விலகி நின்று, அவைகளுக்கு எட்டாதவைகளை உணருகின்றார்கள். தேகச் சார்பை விலகாமல் விலகிப் பிரமத்தைச் சார்ந்து நான் பிரமம் என்று காணுவது ஒருவகை யோக நிலை.

இந்த யோக நிலையை உற்றவர்கள், 'நான் சரீரம்' என்பது எத்துணைப் பொய்யோ, அத்துணைப் பொய் 'நான் பிரமம்' என்பதும் என்றுணர்ந்து.

சிவஞானம் சித்திக்கப் பெற்று, அச்சிவஞான போதத்தால்,

சிவத்தின் உண்மையியல்பையும், அச்சிவத்தின் வேறாக எண்ணமுடியாத சிவமயமான தம் உண்மையியல்பையும் உணராதே உணர்ந்து, 'நான் அது' என்ற பேதம் தோன்றாதே இருமையின் ஒருமை உறுவர்கள்.

இ∴து ஏகபாவம் எனப்படும் வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்த முத்தி நிலை. இந்நிலையோடு ஒப்பிடும்போது 'நான் பிரமம்' என்கின்ற யோக நிலை பொய். ஆனால் மெய் நிலைக்கு அது சாதகம். அதனால் அந்தப் பொய். புரைதீர்ந்த பொய் புரை-குற்றம்.

'காதலினால் நான் பிரமம் என்னும் ஞானம் கருது பசு ஞானம்' என்பது சிவஞான சித்தியார்.

ஞானம் மூன்று வகை. அவை பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என்பன. முறையே ஒன்றிலிருந்து ஒன்று உயர்ந்தது. பதிஞானம்-சிவஞானம் எனப்படும்.சிவஞானமாவது திருவருள். 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்ற திருவாசகம் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

மூவகை ஞானங்களும் 'நான் யார்?' என்ற வினாவை விடுத்தற்கு உபகாரமானவைகள். பதி ஞானமாகிய சிவஞானத்தாலே தான்-நான்-என்பதன் உண்மை இயல்பு சித்திக்கும் என்பது காட்டப்பட்டது.

பசு ஞானத்தினாலே நான் பிரமம் என்ற உணர்வு பிறக்கும். அதனால் நான் என்பதன் உண்மை இயல்பு சித்தியெய்தாது. இந்நிலையை முடிந்த முடிபு எனக் கொள்பவர்கள் ஏகான்மவாதிகள். இவர்கள் கொள்கை ஏகான்மவாதம்.

"தாம் பிரமங் கண்டவர்போல்
தம்மைக் கண்டு ஆங்கது வே
நான் பிரமம் என்பவர் பால்
நண்ணாதே"

என்பது உமாபதி சிவம் அருளிய நெஞ்சுவிடு தூது.

**நன்றி** "சிவசக்தி"
கொழும்பு றோயல் கல்லூரி
இந்துமாணவர் மன்றம் 1964.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பில் உயர்ந்தவர்கள் இறைவனைக் காண்பர்

**க. சிவசங்கரநாதன் அவர்கள், J. P.**
சரசாலை.

இறைவனின் அருட்சக்தி நம்மை பிறப்பெடுக்கவைத்தது. அந்த இறைவனை தரிசிக்க மனமார வாயார புகழ்வது உடலை வருத்தி தவம் செய்வது போன்றன ஓர் நிலையாக இருக்கலாம். மகான்களுக்கும் ஞானிகளுக்கும் இந்த நிலைமை கூடி சாதாரண மக்களால் இப்படியெல்லாம் சாதனை புரிய இயலுமா? இயலாதெனின் சாதாரண மக்களால் இறைவனைத் தரிசிக்கவே இயலாதா? இறைவனுடைய அருளைப்பெற சாத்தியப்படாதா?

இந்த வினாக்களுக்கெல்லாம் தொண்டரடிப் பொடியாழ்வார் மிகவும் சிறப்பாக விளக்கியுள்ளார். இவர் தமிழகத்துப் பெரும் வைணவப்பெரியார் திருமாலின் அருளை நேரடியாகப் பெற்றவர் என்று இவரைப்பற்றி நூல்கள் கூறுகின்றன. திருமாலின் பக்தர்களுக்கு தொண்டர்களுக்கு சேவை செய்வதையே தமது வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு திகழ்ந்ததால் இவரைத் தொண்டரடிப்பொடி ஆழ்வார் என்று மதித்து போற்றினர்.

இறைவன் திருவருளைப் பெற ஒரு மனிதன் எண்ணுகிறான் அதற்கான வழிமுறைகள் என்ன என்பதைக் கேட்டறிந்து உணருகிறான் மிகமிக எளிய வழிகள் தான், ஆனால் அந்த எளிய தகுதிகள் கூட எனக்கு இல்லையே என்கதி என்ன? என்று எண்ணி ஏங்குகிறான். இப்படிப்பட்ட பரிதாபத்துக்குரிய ஒரு மனிதனின் மனக்குமுறலைப் படம் பிடித்துகாண்பிக்கும் பாங்கில் தொண்டரடிப்பொடியாழ்வார் பாடிய பாசுரம் நெஞ்சை நெகிழ்விப்பதாகும். மனத்திலே தூய்மை இல்லை வாயை திறந்தால் இனிமையான சொல் வெளிவருவதில்லை பிறரைப் புண்படுத்தும் வன்சொல்தான் வெளிவருகின்றது. யாரையாவது சாதாரணமாக நோக்கும்போது கூட என் பார்வையிலேயே சினமும் பகைமை உணர்வும்தான் பிரதிபலிக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு வினாடியும் வீண் வாழ்வு வாழும்கெட்டவனாகிய எனக்கு உனது பாத மலரடியினை அடைவதற்கான தகுதி ஏது? கானகத்திலே வளர்ந்த புனிதமான துளசி மாலையை அணிந்து காவிரிநதியால் சூழப்பட்ட திருவரங்கத்திலே வாழ்கின்ற என் இறைவா என்கதி என்ன என்று ஏங்குகிறாராம் அந்த மனிதர். அந்த அப்பாவி மனிதர் கடைத்தேற வழி என்ன? அதுவெகு எளிது! உள்ளத்திலே தூய்மை நிரம்பியிருக்க வேண்டும் எந்த நேரமும் யாரிடமும் இனிய சொற்களே பேசவேண்டும். வாயைத்திறந்தால் சொற்களன்றி வேறு ஒரு சொல்லும் வரக்கூடாது. யாரைக் கண்டாலும் முகத்திலே சினத்தின் வாடை இருக்கக்கூடாது பகைமையின் சின்னமே பொருந்தக்கூடாது நட்புணர்ந்த குளிர்ந்த பார்வை இடம் பெறவேண்டும். சுருங்கச் சொன்னால் சுற்றுப்புற மனிதர்கள் அனைவரிடமும் அன்பு செலுத்தி நட்புறவு கொண்டு யாருக்கும் சிந்தையாலும் செயலாலும் ஏன் பார்வையாலும் கூட தீங்கு செய்யாத மனப்பக்குவம் கொள்ளவேண்டும்.

இந்தத் தகுதியை மட்டும் பெற்று விட்டால் போதும் இறைவனின் திருவடியைச் சரணடைவதற்கான அனுமதிச்சீட்டு கிடைத்த மாதிரித்தான். இந்த தகுதி மட்டும் கிடைத்து விட்டால் வேறு எந்த இடையூறும் குறுக்கிடமுடியாது எந்த தடையும் நமக்கு நேராது யாராலும் இறைவனின் திருவருளைப் பெறுவதைத் தடுக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லொழுக்கமும் பண்புடைமையும் இருந்தால் மட்டுமே போதும் இறைவன் நம் காட்சிக்கெளியவன் ஆகிவிடுவான் என்ற கருத்தை மிகவும் சுவையாக நமக்கு எடுத்து விளக்குகின்றார் தொண்டரடிபொடி ஆழ்வார். பக்தி இலக்கியங்கள் வெறும் பக்தியை மட்டுமே போதிக்கவில்லை பக்தியின் உயிர்நாடியே நல்லொழுக்கமும் நல்ல பண்புணர்வுந்தான் என்று உபதேசிப்பதன் மூலம் நல்லொழுக்கப் பிரச்சாரந்தான் புரிகின்றன என்பதற்கு தொண்டரடிப்பொடியாழ்வாரின் இந்த ஒரு பாடலும் சரியானசான்று. இதுபோன்று நல்லொழுக்கப் பிரச்சாரம் செய்யும் பக்திப் பாடல்களில் பொய்கையாழ்வார் எழுதிய ஒரு பாடலும் குறிப்பிடத்தக்கது. திருமாலைத் தவிர வேறு எந்த தெய்வத்தையும் வணங்கமாட்டேன் என்று அறுதியிட்டு தமது பாசுரத்தில் உறுதியோடு கூறுகிறார் பொய்கையாழ்வார். இத்துடன் நிறுத்திக்கொண்டிருந்தார் என்றால் அவர் பாடலிலே சிறப்பொன்றையும் காணமுடியாது. வைணவசமயத்தை சார்ந்தவர் வைணவசமயத்து பக்தர் இதைத்தானே சொல்வார் இதிலே ஆச்சரியப்பட புகழ்பாட பெருமையாக எடுத்துப்பேச என்ன இருக்கிறது என்று எமக்குள் கேட்கத் தோன்றும். பொய்கையாழ்வார் அப்படி நிறுத்திவிடவில்லை பிறருக்கு சொந்தமான பொருளை சற்றும் விரும்பமாட்டேன் கீழ்த்தரமான தன்மை கொண்டவருடன் கூட்டுறவு கொள்ளமாட்டேன் உயர்ந்த மனப்பக்குவமுள்ளவர்களுடன் மட்டுமே உறவாடி மகிழ்வேன் என்றெல்லாம் கூறி அதற்குப் பின்னர் தான் திருமாலைத்தவிர வேறு தெய்வத்தை தொழமாட்டேன் என்கிறார் பொய்கையாழ்வார்.

பிறர்பொருளை விரும்பக்கூடாது கீழ்மக்களோடு சேரக்கூடாது உயர்ந்த பண்பினரோடு மட்டும் தான் உறவுகொள்ள வேண்டும் இத்தகைய குணங்களைப் பெற்றவர்கள் மக்களில் உயர்ந்தோராகி விடுகின்றனர். இந்த சிறந்த குணங்களை என்னுள்ளே நிரப்பிக்கொள்வதென நான் திட்டமிட்டு முயற்சியில் இறங்கிவிட்டேன் அதனால் திருமாலைத் தொழக்கூடிய தகுதி என்னிடம் சேர்ந்து விட்டது எனவே பிறப்பு இறப்பு இன்பம் துன்பம் இனி என்னை அண்டாது என்று பெருமைபொங்க கூறுகிறார் பொய்கையாழ்வார். இறைவனைப் பணிவதற்கு நல்லொழுக்கமும் மிக முக்கியம் என்று ஒவ்வொரு சமயத்தலைவர்களும் முக்கியம் வற்புறுத்தி வந்த காரணத்தால் தான் தெய்வநம்பிக்கை மிகுந்திருந்த காலத்தில் பெரும்பான்மை மக்கள் நல்லொழுக்கசாலிகளாக திகழமுடிந்தது. இதை ஆழ்வார்கள் மட்டுமல்ல சமய குரவர்களும் காட்டிய பாதைகளில் அவர்கள் பாடல்களிலும் உணரலாம். அதுமட்டுமல்ல செம்மனச்செல்வி அம்மையாருக்கு கூலிஆள் கிடையாதபோது இறைவனே கூலியாளாக வந்து செம்மனச்செல்வியாரின் குறை போக்கினார். மாணிக்கவாசகர்க்கு குதிரை தேவைப்பட்டபோது நரிகளை குதிரைகளாக்கி கொடுத்தார். சுந்தரர் தமது மனைவிக்கு உணவு அளிக்க முடியவில்லை என்ற போதுநெல்லை வழங்கினார். திருநாவுக்கரசர் பிறமதத்தினரால் துன்பப்படுத்தப்பட்டபோது இறைவன் வேண்டிய நேரம் கைகொடுத்தார். சம்பந்தருக்கு ஞானப்பால்கொடுத்தார். இவையாவும் இறை நம்பிக்கையையும் பண்புள்ள சமுதாயத்தின் வழிகாட்டல்களையும் உணர்த்துகின்றன. திருமூலரின் திருமந்திரத்தில் இறைவனைப் பற்றி அறிய அறிய பக்திச்சுவை உண்டு. நல்ல சிந்தனையுடனும் நல்ல நோக்கத்துடனும் இறைவனை யாம் வழிபட்டால் வேண்டிய நேரம் இறைவன் கைகொடுப்பார். இதனை இந்து மதம் தெளிவாக உணர்த்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில்களில் செய்யக் கூடாதவை

ஆடையினால் உடலை மூடிக் கொண்டு ஆலயத்தில் பிரதட்சணம், நமஸ்காரம் செய்யக்கூடாது. ஒரு நமஸ்காரம், ஒரு பிரதட்சணம் செய்யக்கூடாது. தனித்தனியாக ஒவ்வொரு கடவுளுக்கும் நமஸ்காரம் செய்யக்கூடாது. தெற்கு முகமாக நமஸ்காரம் செய்யக்கூடாது.

கோயிலுக்குத் தீட்டுடன் செல்லக்கூடாது. எச்சில் உமிழ்தல், சிறுநீர் கழித்தல் கூடாது. கோயிலுக்குள் கால் அலம்புதல் கூடாது. ஆலயத்தில் கட்டிலில் உட்காருவது, படுத்து உறங்குவது கூடாது. தலைமுடி ஆற்றுதல் கூடாது.

பொய் பேசுதல், இரைந்து சிரித்தல், அழுதல், கண்ணீர் விடுதல், தேசாந்திரக் கதை பேசுதல், இவைகளைச் செய்யக்கூடாது. பிறரை நிந்தித்தல் கூடாது.

இறைவனுக்கு நிவேதனம் செய்யாததை உண்ணல், உணவு தின்பண்டங்கள் ஆகியவற்றை அதிலும் சந்தியா வேளையில் சாப்பிடுதல்கூடாது. தாம்பூலம் தரித்தல் கூடாது.

கம்பளி ஆடை தரித்துக் கோயிலுக்குள் வருதல் ஒருவர் காலில் மற்றவர் விழுந்து கும்பிடுதல் பெண்களிடம் முறை தவறிப் பேசுவது, நடப்பது, ஒருவருக்கொருவர் இடித்துக் கொள்ளுதல், ஒருவரை அடித்தல், வேறு ஒருவரை நினைத்தல், வேறு ஒருவருக்கு வந்தனம் செய்தல் இவைகளைச் செய்யக்கூடாது.

எண்ணெய் தடவிக் கொள்ளுதல், விளக்குக்கு எண்ணெய் விட்டுக் கசியும் எண்ணெயைத் தலையிலோ உடம்பிலோ தடவிக் கொள்ளுதல் கூடாது.

கண்ட இடங்களில் சூடம் ஏற்றுவது, விக்ரகங்களின் பாதங்களில் சூடம் ஏற்றுதல் கூடாது.

விக்ரகங்களைத் தொட்டுக் கும்பிடுதல் கூடாது. (நம்மை யாராவது திடீரென்று தொட்டால் நமக்குக் கூச்சம் ஏற்படுகிறது. அதைப் போல விக்ரகங்களுக்கும் கூச்சம் உண்டாகி, சாபம் ஏற்க நேரிடும்.)


"சாஸ்திரங்களில் ஒற்றைக் கையால் வணங்குவது தவறு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரே ஒரு முறை பிரகாரத்தை வலம் வருவது தப்பு என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரே ஒரு முறை நமஸ்கரிப்பது அபசாரம் என்று சொல்லப்படவில்லை. ஆகையால் ஒரு முறை செய்தாலே போதும். அதற்கு மேல் செய்வது உத்தமம் என்று சொல்லலாம். பிராகாரத்தை மூன்று முறையாவது வலம் வரவேண்டும்" என்கிறார் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்.

**நன்றி:- இந்துமத ஆசார அநுஷ்டானங்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தாய்லாந்திலுள்ள பௌத்த ஆச்சிரமத்தில் வாழும் எச்ஐவி.(HIV)
நோயுடைய பச்சிளம்பாலகர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தாய்லாந் சிக்மை மாநிலத்திலுள்ள விக்கிரகங்கள், ஆதிசிவன்

தாய்லாந்திலுள்ள இந்துமத புராதனப் பொருட்கள்



தாய்லாந்திலுள்ள இந்துமத புராதனப் பொருட்கள், விக்கிரகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org